[ஜூலை 22, 2004 நிலவரப்படி]

## வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் சட்டத்தின் கீழ் உள்ள இலஞ்சம் தடுப்பு ம ற்றும் புத்தகங்கள் & பதிவேடுகள் விதிகள்

*நடப்பு முதல் பதிப்பு L. 105-366 (நவம்பர்10, 1998) வரை*

**அமெரிக்கக் கோட்பாடுகள்**

**தலைப்பு 15. வணிகம் மற்றும் வர்த்தகம்**

**அத்தியாயம் 2B--பிணையங்கள் பரிவர்த்தனைகள்**

**§ 78m. பருவ வெளியீடு மற்றும்  இதர   அறிக்கைகள்**

**(a) பிணையத்தை வழங்கியவரால் அளிக்கப்படுகிற அறிக்கைகள்;  உள்ளடக்கங்கள்**

பிணையப் பரிவர்த்தனைகளில் நேர்மையான செயல்தொடர்பை உறுதி செய்வதற்கும் மற்றும் முதலீட்டாளர்களின் முறையான பாதுகாப்புக்காகவும் ஆணைக் குழு அறுதியிடக்கூடிய அத்தகைய தேவையான அல்லது பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு  ஏற்ப, இந்த தலைப்பின் பிரிவு 78l க்கு ஏற்ப பதிவு செய்யப் பட்ட ஒரு பிணையத்தை வழங்கியவர் ஒவ்வொருவரும் ஆணைக் குழுவில் பின்வருவனவற்றை தாக்கல் செய்ய வேண்டும்--

(1) ஜூலை 1, 1962 க்கு முன்னதாக முழுமையாக செயல்படுத்தப் பட்ட எந்த ஒரு பொருள் ஒப்பந்தத்தையும் தாக்கல் செய்வது ஆணைக் குழுவிற்கு தேவைப் படாது ஆகையால் அதனைத் தவிர்த்து, ஆணைக் குழு கணிசமான அளவு நடப்பில் வைத்திருக்க வேண்டிய மற்றும் சேர்க்கப் பட   வேண்டிய  அல்லது ஒரு விண்ணப்பத்தின் உடன் தாக்கல் செய்யப் படுகிற தகவல்கள் மற்றும் ஆவணங்கள் அல்லது இந்த தலைப்பின் பிரிவு 78l க்கு ஏற்ப தாக்கல் செய்யப் படுகிற பதிவுக் கூற்று உள்ளிட்ட அத்தகைய தகவல்கள் மற்றும் ஆவணங்கள்.

(2) சுதந்திரமான பொது கணக்காளர்களால் ஆணைக் குழுவின் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளால் தேவைப் படுகிற பட்சத்தில் சான்று அளிக்கப் பட்ட அத்தகைய ஆண்டு அறிக்கைகள் (மற்றும் அவற்றின் அத்தகைய நகல்கள்), மற்றும் ஆணைக் குழு அறுதியிடக் கூடிய அத்தகைய காலாண்டு அறிக்கைகள் (மற்றும் அவற்றின் அத்தகைய நகல்கள்).

ஒரு தேசிய பிணையங்கள் பரிவர்த்தனையில் பதிவு செய்யப்பட்ட ஒரு பிணையத்தை வழங்கியவர் ஒவ்வொருவரும் பரிவர்த்தனையுடன் அத்தகைய தகவல்கள், ஆவணங்கள், மற்றும் அறிக்கைகளின் அசலின் பிரதியையும் தாக்கல் செய்ய வேண்டும்.

**(b) அறிக்கையின் படிவம்; புத்தகங்கள், பதிவேடுகள், மற்றும் உட்புற கணக்கியல்; நெறியாக்கங்கள்**

* * *

(2) இந்தத் தலைப்பின் பிரிவு 78l க்கு ஏற்ப பதிவு செய்யப் பட்ட  பிணையங்களின் வகுப்பு ஒன்றினைக் கொண்டுள்ள பிணையத்தை வழங்கியவர் ஒவ்வொருவரும் மற்றும் இந்தத் தலைப்பின் பிரிவு 78o (d) க்கு ஏற்ப அறிக்கைகளை தாக்கல் செய்ய வேண்டி இருக்கிற பிணையத்தை வழங்கியவர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும்--

(A) பிணையத்தை வழங்கியவரின் சொத்துகளின் பரிவர்த்தனைகள்  மற்றும் அமைப்புகளில் மாற்றங்களை சரியான விவரங்களுடனும், துல்லியமாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கிற புத்தகங்கள், பதிவேடுகள், ம ற்றும் கணக்குகள் ஆகியவற்றை உருவாக்கி வைத்துக் கொள்ள வேண்டும்; மற்றும்

(B)  பின்வருவனவற்றுக்கான நியாயமான உத்தரவாதங்களை வழங்குவதற்கு உரிய போதுமான அளவு உட்புற கணக்கியல் கட்டுப்பாடுகளின் ஒரு முறைமையை வடிவமைத்து பராமரிக்க வேண்டும்—

(i) நிர்வாகத்தின் பொதுவான அல்லது குறிப்பிட்ட அங்கீகாரத்திற்கு ஏற்ப பரிவர்த்தனைகள் செயல்படுத்தப் பட்டுள்ளன;

(ii) பின்வருவனவற்றின் தேவைக்கு ஏ ற்ப பரிவர்த்தனைகள் பதிவு செய்யப் பட்டுள்ளன (I) பொதுவாக ஏற்றுக் கொள்ளப் பட்ட கணக்கியல் கோட்பாடுகள்  அல்லது அத்தகைய அறிக்கைகளுக்கு பொருந்தக் கூடிய வேறு ஏதாவது அளவுகோல் உடன் ஒத்துப் போவதற்கு

ஏற்ப நிதி அறிக்கைகளை தயாரிக்க அனுமதிப்பதற்கு, மற்றும் (II) சொத்துகளுக்கான பொறுப்புடைமையை பராமரிப்பதற்கு;

(iii) நிர்வாகத்தின் பொதுவான அல்லது குறிப்பிட்ட அங்கீகாரத்திற்கு ஏற்ப மட்டுமே சொத்துகளை அணுகிப் பயன்படுத்த அனுமதிக்கப்படும்; மற்றும்

(iv) சொத்துகளுக்கான பதிவு செய்யப் பட்ட பொறுப்புடைமை ஏற்கனவே உள்ள சொத்துகளுடன் நியாயமான இடைவேளைகளில் ஒப்பிடப் பட்டு, ஏதாவது வித்தியாசங்கள் காணப் பட்டால் அதற்கேற்ப பொருத்தமான நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

(3) (A) அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு தொடர்பான விடயங்களைப் பொறுத்தவரை, அத்தகைய விடயங்களுக்கு பொறுப்புடைய எந்த ஒரு ஃபெடரல் துறை அல்லது முகமையின் தலைமை உடன் ஒத்துழைப்புடன் செயல்படும் எந்த ஒரு நபரின் மீதும், இந்த உட்பிரிவின் பத்தி (2)ன் கீழ் உள்ள கடமை அல்லது சட்டக் கடப்பாடு எதுவும், அத்தகைய ஒரு துறை அல்லது முகமையின் தலைமை உடன் செய்யப் படுகிற அத்தகைய ஒத்துழைப்பு உடனான செயலானது அத்தகைய துறை அல்லது முகமையின் தலைமையினால் வழங்கப் பட்ட குறிப்பிட்ட, எழுத்துப் பூர்வமான உத்தரவின் மீது செய்யப் பட்டடு இருந்தால் மற்றும் அத்தகைய உத்தரவுகளை வழங்குவதற்கு ஜனாதிபதி உரிய அதிகாரமளிப்பு இணங்கி இருந்தால், சுமத்தப் படாது. இந்தப் பத்தியின் கீழ் வழங்கப் படுகிற ஒவ்வொரு உத்தரவும், இந்தப் பத்தியின் விதிகள் செயல் படுத்தப்பட வேண்டியவற்றைப் பொறுத்து குறிப்பிட்ட மெய்நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை நிர்ணயிக்கும். அத்தகைய ஒவ்வொரு உத்தரவும், எழுத்துப் பூர்வமாக புதுப்பிக்கப் பட்டால் ஒழிய வழங்கப் பட்ட தேதியில் இருந்து ஓ ர் ஆண்டுக்குப் பிறகு காலாவதி ஆகிவிடும்.

(B) இந்தப் பத்திக்கு ஏற்ப அத்தகைய ஒரு உத்தரவை வழங்குகிற அமெரிக்காவின் ஒரு ஃபெடரல் துறை அல்லது முகமையின் தலைமையில் உள்ள ஒவ்வொருவரும் அத்தகைய அனைத்து உத்தரவுகள் அடங்கிய ஒரு முழுமையான கோப்பை பராமரிக்க வேண்டும் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 1ம் தேதி அன்று, முந்தைய ஆண்டின் போது எந்த நேரத்திலும் அமலில் இருந்த அத்தகைய உத்தரவுகள் மூலம் கவனிக்கப் பட்ட விடயங்களின் சுருக்கத் தொகுப்பை பிரதிநிதிகள் அவையின் புலனாய்வு நிரந்தர தேர்ந்து எ டுக்கப் பட்டக் குழுவுக்கும் மற்றும் செனட் புலனாய்வு தேர்ந்து எ டுக்கப் பட்டக் குழுவுக்கும் அனுப்ப வேண்டும்.

(4) இந்த உட்பிரிவின் பத்தி (5)ல் வழங்கப் பட்டு உள்ளவற்றைத் தவிர்த்து இந்த உட்பிரிவின் பத்தி (2)ன் தேவைப் பாடுகளுக்கு ஏற்ப இணங்கி நடக்கத் தவறுவதற்காக குற்ற சட்டக் கடப்பாடு எதுவும் சுமத்தப் படாது.

(5) எந்த ஒரு நபரும் உட்புற கணக்கியல் கட்டுப்பாடுகளின் ஒரு முறைமையை வேண்டுமென்றே தந்திரமாக மீறவோ அல்லது வேண்டுமென்றே செயல்படுத்தாமலோ இருக்கக் கூடாது அல்லது பத்தி (2)ல் விவரிக்கப் பட்டு உள்ள எந்த ஒரு புத்தகம், பதிவேடு, அல்லது கணக்குகளை வேண்டுமென்றே பொய்ப் பதிவுரு செய்யக் கூடாது.

(6) ஒரு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனத்தின் சார்பாக வாக்களிக்கும் அதிகாரத்தின் 50 சதவீதம் அல்லது அதற்கு குறைவாக கொண்டுள்ள இந்த தலைப்பின் பிரிவு 78l க்கு ஏற்ப பதிவு செய்யப் பட்ட பிணையங்களின் வகுப்பு ஒன்றினைக் கொண்டுள்ள ஒரு பிணையத்தை வழங்கியவர் அல்லது இந்த தலைப்பின் பிரிவு 78o (d) க்கு ஏற்ப அறிக்கைகளை தாக்கல் செய்ய வேண்டியிருக்கிற ஒரு பிணையத்தை வழங்கியவரை பொறுத்தவரை பிணையத்தை வழங்கியவரின் சூழ்நிலைகளின் கீழ் நியாயமாக உள்ள அளவு வரைக்கும் பத்தி (2) ன் விதிகளின் இயக்க விளைவுகளை, பத்தி (2) ல் கூறப்பட்டுள்ளவற்றுக்கு இணங்க அத்தகைய உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனம் உட்புற கணக்கியல் கட்டுப்பாடுகளின் ஒரு முறைமையை வடிவமைத்து பராமரிக்கச் செய்வதற்காக பிணையத்தை வழங்கியவர் நல்லெண்ணத்துடன் தொடர மட்டுமே அனுமதிக்கிறது. அத்தகைய சூழ்நிலைகள், உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனத்தில் பிணையத்தை வழங்கியவரின் உடைமையுரிமை தொடர்புடைய அளவு மற்றும் அத்தகைய நிறுவனம் அமைந்துள்ள நாட்டின் வணிகச் செயல் பாடுகளை கட்டுப் படுத்துகிற சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றுக்கு உள்ளடங்கியது. அத்தகைய இயக்க விளைவுகளை பயன் படுத்துவதற்கு நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்கிற ஒரு பிணையத்தை வழங்கியவர் பத்தி (2)ன் தேவைப் பாடுகளுக்கு ஏற்ப இணங்கி நடந்ததாக அறுதியாக கருதப்படும்.

(7) இந்த உட்பிரிவின் பத்தி (2) ன் நோக்கத்திற்காக, " நியாயமான உத்தரவாதங்கள்" மற்றும் "நியாயமான விவரங்கள்" ஆகியவை அத்தகைய அளவிலான விவரங்கள் மற்றும் உத்தரவாதத்தின் அளவு என்பவை மதிநுட்ப அதிகாரிகளை தங்களது சொந்த விவகாரங்களின் நடத்தையில் திருப்திப் படுத்துபவையாக இருக்க வேண்டும் என அர்த்தப் படுகிறது.

* * *

## § 78dd-1 [1934ம் ஆண்டின் பிணையங்கள் & பரிவர்த்தனை சட்டத்தின் பிரிவு 30A]

**பிணையத்தை வழங்கியவர்களால் மேற்கொள்ளப்படக்கூடாது என தடைசெய்யப்பட்டுள்ள வெளிநாட்டு வர்த்தக நடைமுறைகள்**

**(a) தடை**

இந்த தலைப்பின் பிரிவு 78l க்கு ஏற்ப பதிவு செய்யப் பட்ட பிணையங்களின் வகுப்பு ஒன்றினைக் கொண்டுள்ள அல்லது இந்த தலைப்பின் பிரிவு 78o (d) ன் கீழ் அறிக்கைகளை தாக்கல் செய்ய வேண்டியிருக்கிற பிணையத்தை வழங்கியவர் எவரும், அல்லது அத்தகைய பிணையத்தை வழங்கியவரின் அதிகாரி, நெறியாளுநர், ஊழியர், அல்லது முகவர் எவரும் அல்லது அத்தகைய பிணையத்தை வழங்கியவரின் சார்பாக அதிலிருந்து செயல்படுகிற பங்குதாரர் எவரும் பின்வருவனவற்றுக்காக ஒரு சலுகையின் காரிய முன்னேற்றத்தில், கொடுப்பனவில், செலுத்துவதற்கு வாக்குறுதி அளிப்பதில், அல்லது எந்த ஒரு பணம், அல்லது சலுகை, பரிசு ஆகியவற்றின் கொடுப்பனவில் அதிகாரமளிப்பதில், கொடுப்பதற்கு வாக்குறுதி அளிப்பதில், அல்லது மதிப்புடைய எதையும் கொடுப்பதாக அதிகாரமளிப்பதில் மாநிலங்களுக்கு
இடையிலான வணிகத்தின் அஞ்சல்களையோ அல்லது எந்தவொரு வழிமுறைகளையோ அல்லது வழி வகைகளையோ நேர்மையின்றி பயன் படுத்துவது சட்ட விரோதமாகும்--

(1) எந்த ஒரு வெளிநாட்டு அதிகாரிக்கும் பின்வரும் நோக்கங்களுக்காக--

(A) (i) அத்தகைய வெளிநாட்டு அதிகாரி தன்னுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டு எடுக்கிற எந்த ஒரு செயல் அல்லது முடிவையும் பாதிக்கிற வகையில் நடத்தல், (ii) அத்தகைய அதிகாரியின் சட்டப் பூர்வமான கடமையை மீறுகிற எந்த ஒரு செயலையும் செய்வதற்கு அல்லது செய்யாமல் தவறுவதற்கு அத்தகைய வெளிநாட்டு அதிகாரியை தூண்டுதல், அல்லது (iii) எந்த ஒரு முறையற்ற சாதக நலன்களையும் உறுதிசெய்தல்; அல்லது

(B) எந்த ஒரு நபருக்கான அல்லது அவருடன் சேர்ந்து செய்கிற வணிகத்தைப் பெறுவதில் அல்லது தக்கவைப்பதில், அல்லது அவருக்கு வணிகத்தை திசைதிருப்பி விடுவதில், அத்தகைய பிணையத்தை வழங்கியவருக்கு உதவும் பொருட்டு

அத்தகைய வெளிநாட்டு அதிகாரியானவர் ஒரு வெளிநாட்டு அரசின் அல்லது வழிவகைகளின் எந்த ஒரு செயல் அல்லது முடிவை பாதிக்கும் வகையில் அல்லது தாக்கத்தை ஏற்படுத்திடும் வகையில் தனது செல்வாக்கை அத்தகைய ஒரு அரசுடன் அல்லது வழி வகைகளுடன் பயன் படுத்துவதற்கு தூண்டுதல்;

(2) பின்வரும் நோக்கங்களுக்காக எந்த ஒரு வெளிநாட்டு அரசியல் கட்சியையோ அல்லது அதிகாரியையோ அவற்றைப் போன்ற அல்லது வெளிநாட்டு அரசியல் அலுவலகத்திற்கான எந்த ஒரு வேட்பாளரையோ--

(A) (i) அத்தகைய கட்சி, அதிகாரி, அல்லது வேட்பாளர் தனது அல்லது தமது அதிகார வரம்பிற்கு உட்பட்டு எடுக்கிற எந்த ஒரு செயல் அல்லது முடிவையும் பாதிக்கிற வகையில் நடத்தல், (ii) அத்தகைய கட்சி, அதிகாரி, அல்லது வேட்பாளரின் சட்டப் பூர்வமான கடமையை மீறுகிற எந்த ஒரு செயலையும் செய்வதற்கு அல்லது செய்யாமல் தவறுவதற்கு அத்தகைய கட்சி, அதிகாரி, அல்லது வேட்பாளரை தூண்டுதல், அல்லது (iii) எந்த ஒரு முறையற்ற சாதக நலன்களையும் உறுதி செய்தல்; அல்லது

(B) எந்த ஒரு நபருக்கான அல்லது அவருடன் சேர்ந்து செய்கிற வணிகத்தைப் பெறுவதில் அல்லது தக்கவைப்பதில், அல்லது அவருக்கு வணிகத்தை திசை திருப்பி விடுவதில், அத்தகைய பிணையத்தை வழங்கியவருக்கு உதவும் பொருட்டு

அத்தகைய அரசு அல்லது வழி வகைகளின் எந்த ஒரு செயல் அல்லது முடிவை பாதிக்கும் வகையில் அல்லது தாக்கத்தை ஏற்படுத்திடும் வகையில் ஒரு வெளிநாட்டு அரசுடன் அல்லது வழி வகைகள் போன்றவற்றுடன் தனது அல்லது தமது செல்வாக்கை பயன் படுத்துவதற்கு அத்தகைய கட்சி, அதிகாரி, அல்லது வேட்பாளரை தூண்டுதல் ; அல்லது

(3) அத்தகைய ப ணம், மதிப்புடைய பொருளின் முழுமையோ அல்லது ஒரு பகுதியோ, எந்த ஒரு வெளிநாட்டு அதிகாரிக்கோ, எந்த ஒரு வெளிநாட்டு அரசியல் கட்சிக்கோ அல்லது அதிகாரிக்கோ அவற்றைப் போன்றவற்றுக்கோ, அல்லது வெளிநாட்டு அரசியல் அலுவலகத்திற்கான எந்த ஒரு வேட்பாளருக்கோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்கப் பட உள்ளது, கொடுக்கப் பட உள்ளது அல்லது வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது என அறிந்திருக்கிற அதேவேளையில் எந்த ஒரு நபரும் பின்வரும் நோக்கங்களுக்காக--

(A) (i) அத்தகைய வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, கட்சி அதிகாரி, அல்லது வேட்பாளர் தனது அல்லது தமது அதிகார வரம்பிற்கு உட்பட்டு எடுக்கிற எந்த ஒரு செயல் அல்லது முடிவையும் பாதிக்கிற வகையில் நடத்தல், (ii) அத்தகைய வெளிநாட்டு அதிகாரியின், அரசியல் கட்சியின், கட்சி அதிகாரியின், அல்லது வேட்பாளரின் அத்தகைய வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, கட்சி அதிகாரி, அல்லது வேட்பாளரின் சட்டப் பூர்வமான கடமையை மீறுகிற எந்த ஒரு செயலையும் செய்வதற்கு அல்லது செய்யாமல் தவறுவதற்கு தூண்டுதல், அல்லது (iii) எந்த ஒரு முறையற்ற சாதக நலன்களையும் உறுதி செய்தல்; அல்லது

(B) எந்த ஒரு நபருக்கான அல்லது அவருடன் சேர்ந்து செய்கிற வணிகத்தைப் பெறுவதில் அல்லது தக்கவைப்பதில், அல்லது அவருக்கு வணிகத்தை திசை திருப்பி விடுவதில், அத்தகைய பிணையத்தை வழங்கியவருக்கு உதவும் பொருட்டு

அத்தகைய வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, கட்சி அதிகாரி, அல்லது வேட்பாளர் ஒரு வெளிநாட்டு அரசுடன் அல்லது வழி வகைகளுடனான அவற்றிலிருந்து அத்தகைய அரசு அல்லது வழி வகைகளின் எந்த ஒரு செயல் அல்லது முடிவை பாதிக்கும் வகையில் அல்லது தாக்கத்தை ஏற்படுத்திடும் வகையில் தனது அல்லது தமது செல்வாக்கை பயன் படுத்துவதற்கு தூண்டுதல்.

**(b) வழமையான அரசு நடவடிக்கைக்கான விதி விலக்கு**

இந்தப் பிரிவின் உட்பிரிவுகள் (a) மற்றும் (g) ஒரு வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, அல்லது கட்சி அதிகாரியால் செய்யப் படுகிற ஒரு வழமையான அரசு நடவடிக்கையின் செயல் பாட்டை துரிதப் படுத்துவதற்கு அல்லது பெறுவதற்குரிய நோக்கத்துடன் ஒரு வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, அல்லது கட்சி அதிகாரிக்கு அளிக்கப் படுகிற எந்த ஒரு எளிதாக்குகிற அல்லது துரிதப் படுத்துகிற கொடுப்பனவிற்கு பொருந்தாது.

**(c) உடன்பாடான தற்காப்புகள்**

இந்தப் பிரிவின் உட்பிரிவு (a) அல்லது (g) ன் கீழ் உள்ள செயல்கள் ஒரு உடன் பாடான தற்காப்பாக கருதப் படும், அதாவது—

(1) கொடுக்கப் பட்ட  மதிப்புடைய எந்த ஒரு கொடுப்பனவு, பரிசு, சலுகை, அல்லது வாக்குறுதியும், வெளிநாட்டு அதிகாரியின், அரசியல் கட்சியின், கட்சி அதிகாரியின், அல்லது வேட்பாளரின் நாட்டின் எழுத்துப் பூர்வமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளின் கீழ் சட்டப் பூர்வமாக இருக்க வேண்டும்; அல்லது

(2) கொடுக்கப் பட்ட  மதிப்புடைய எந்த ஒரு கொடுப்பனவு, பரிசு, சலுகை, அல்லது வாக்குறுதி அல்லது செயல்பாடு உள்ளிட்டவற்றுடன் நேரடியாக தொடர்புடைய ஒரு வெளிநாட்டு அதிகாரி, கட்சி, கட்சி அதிகாரி, அல்லது வேட்பாளரால் அல்லது அவர்களின் சார்பாக ஏற்பட்ட  பயணம் மற்றும் வாடகைத் தங்குவிடுதி செலவுகள் போன்றவை நியாயமான மற்றும் உண்மையான செலவாக இருக்க வேண்டும்.--

(A) பொருட்கள் அல்லது சேவைகளின் முன்னேற்றத்துக்கான ஆக்க முயற்சி, செயல் விளக்கம், அல்லது விளக்கம்; அல்லது

(B) ஒரு வெளிநாட்டு அரசுடன் அல்லது முகமை அவற்றைப் போன்றவற்றுடனான ஒரு ஒப்பந்தத்தை செயல் படுத்தல்.

**(d) அட்டர்னி ஜெனரலால் வழங்கப் படும் வழிகாட்டு நெறிகள்**

அட்டர்னி ஜெனரல், ஆகஸ்ட் 23, 1988 ப் பிறகு ஓராண்டுக்கு மிகாத காலத்திற்குள், ஆணைக் குழு, வணிகத் துறைச் செயலாளர், அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி, அரசுத் துறைச் செயலாளர், மற்றும் கருவூலத் துறைச் செயலாளர் உள்ளிட்டோருடன் கலந்தாலோசனை செய்த பிறகு, மற்றும் பொது அறிவிப்பு மற்றும் கருத்துரை நடைமுறைகள் ஊடாக ஆர்வமுள்ள நபர்கள் அனைவரின் கருத்துக்களையும் பெற்ற பிறகு, இந்தப் பிரிவுடன் இணங்கி உள்ளதற்குத் தக்க எந்த அளவுக்கு எளிதாக்க முடியும் என்றும் இந்தப் பிரிவின் முந்தைய விதிகளை மேலும் தெளிவுபடுத்துவதன் மூலமாக வணிகச் சமூகத்திற்கு உதவிட முடியும் என்றும் தீர்மானிப்பார் மற்றும், அத்தகைய தீர்மானத்தின் அடிப்படையிலும் மற்றும் தேவையான மற்றும் பொருத்தமான அளவுக்கும் ஏற்ப, பின்வருவனவற்றை வழங்கலாம்—

(1) இந்தப் பிரிவின் முந்தைய விதிகளுடன் இணக்கமாக இருக்கும் என  அட்டர்னி ஜெனரல் தீர்மானிக்கிற நீதித் துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கையின் தேவைகளுக்கான ஏற்றுமதி விற்பனைகள் ஏற்பாடுகளின் பொதுவான வகைகள் மற்றும் வணிக

ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய குறிப்பிட்ட நடத்தை வகைகளை விவரிக்கிற வழிகாட்டு நெறிகள்; மற்றும்

(2) இந்தப் பிரிவின் முந்தைய விதிகள் தொடர்பான நீதித் துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கையுடன் தங்கள் நடத்தை இணங்கி இருப்பதற்காக தன்னார்வத்தின் அடிப்படையில் பிணையத்தை வழங்கியவர்கள் பயன் படுத்தக் கூடிய பொதுவான முன்னெச்சரிக்கை நடைமுறைகள்.

தலைப்பு 5 ன் அத்தியாயம் 5 ன் உள் அத்தியாயம் II ன் விதிகளுக்கு ஏற்ப இதற்கு முந்தைய வாக்கியத்தில் குறிப்பிடப் பட்டுள்ள வழிகாட்டு நெறிகள் மற்றும் நடைமுறைகளை அட்டர்னி ஜெனரல் வழங்குவார் மற்றும் அத்தகைய வழிகாட்டு நெறிகள் மற்றும் நடைமுறைகள் அந்தத் தலைப்பின் அத்தியாயம் 7 ன் விதிகளுக்கு உட்பட்டு இருக்கும்.

**(e) அட்டர்னி ஜெனரலின் கருத்துக்கள்**

(1) அட்டர்னி ஜெனரல், அமெரிக்காவின் பொருத்தமான துறைகள் மற்றும் முகமைகளுடன் கலந்தாலோசனை செய்த பிறகு மற்றும் பொது அறிவிப்பு மற்றும் கருத்துரை நடைமுறைகள் ஊடாக ஆர்வமுள்ள நபர்கள் அனைவரின் கருத்துக்களையும் பெற்ற பிறகு, இந்தப் பிரிவின் முந்தைய விதிகள் தொடர்பான நீதித் துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கையுடன் தங்கள் நடத்தை இணங்கி இருப்பது தொடர்பாக பிணையத்தை வழங்கியவர்களால் கேட்கப் படும் குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதில்களை வழங்குவதற்குரிய ஒரு நடைமுறையை நிறுவுவார். அட்டர்னி ஜெனரல், அத்தகைய ஒரு வேண்டுகோளை பெற்ற பிறகு 30 நாட்களுக்குள் அந்த வேண்டுகோளுக்கு பதில் அளிக்கும் விதமாக ஒரு கருத்தை வழங்குவார். எதிர்காலத்தில் நிகழக் கூடிய வாய்ப்புள்ள சில குறிப்பிட்ட நடத்தைகள் நீதித் துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கையின் தேவைகளுக்கான இந்தப் பிரிவின் முந்தைய விதிகளை மீறுகிறதா என்று அந்தக் கருத்து குறிப்பிடும். முந்தைய வேண்டுகோள்களில் குறிப்பிடப் பட்டுள்ள நடத்தை நோக்கத்திற்கு அப்பாற்பட்ட  எதிர்காலத்தில் நிகழக்கூடிய வாய்ப்புள்ள இதரகுறிப்பிட்ட நடத்தைகள் தொடர்பான கருத்துக்களுக்காக கூடுதல் வேண்டுகோள்களை அட்டர்னி ஜெனரலிடம் தாக்கல் செய்யலாம். இந்தப் பிரிவின் பொருந்தக் கூடிய விதிகளின் கீழ் கொண்டு வரப்படுகிற எந்த ஒரு நடவடிக்கையிலும், அதாவது ஒரு பிணையத்தை வழங்கியவரால் ஒரு வேண்டுகோளில் குறிப்பிடப் பட்டுள்ள ஒரு நடத்தை, மற்றும் இதற்காக அட்டர்னி ஜெனரல் ஒரு கருத்தை வழங்கியிருக்கிற அத்தகைய நடத்தையானது நீதித் துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கை உடன் ஒத்துப் போகிறதா, இந்தப் பிரிவின்

முந்தைய விதிகளுடன் இணக்கமான முறையில் உள்ளதா என  ஒரு மறுக்கத்தக்க அனுமானம் இருக்கலாம். சான்றின் ஒரு விஞ்சுநிலையால் அத்தகைய ஒரு அனுமானம் மறுக்கப் படலாம்.  இந்தப் பத்தியின் தேவைகளுக்காக அனுமானத்தை கருதுகையில், அட்டர்னி ஜெனரலிடம் சமர்ப்பிக்கப் பட்ட தகவல்கள் துல்லியமானவையாக உள்ளனவா மற்றும் அட்டர்னி ஜெனரலால் பெறப் பட்ட எந்த ஒரு வேண்டுகோளிலும் குறிப்பிடப் பட்ட நடத்தை நோக்கத்திற்குள் உள்ளனவா என்பன உள்ளடக்கிய மற்றும் இவை மட்டும்தான் என்று வரையறைக்குள் இல்லாதபடி சம்பந்தப் பட்ட அனைத்து காரணிகளையும் ஒரு நீதிமன்றம்  சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.  தலைப்பு 5 ன் அத்தியாயம் 5 ன் உள் அத்தியாயம் IIன் விதிகளுக்கு ஏற்ப அட்டர்னி ஜெனரல் இந்தப் பத்தியால் தேவைப்படும் நடைமுறையை நிறுவுவார் மற்றும் அந்த நடைமுறை அந்தத் தலைப்பின் அத்தியாயம் 7 ன் விதிகளுக்கு உட்பட்டு இருக்கும்.

(2) பத்தி (1) ன் கீழ் நிறுவப் பட்ட நடைமுறையின் கீழ் ஒரு பிணையத்தை வழங்கியவரால் விடுக்கப் பட்ட வேண்டுகோளுடன் தொடர்புடைய அமெரிக்காவின் நீதித் துறை அல்லது வேறு ஏதாவது துறை அல்லது முகமையில் தயாரிக்கப் பட்ட  அல்லது உள்ளிட்டோருக்கு வழங்கப் பட்ட, உள்ளிட்டோரால் பெறப்பட்ட, எந்த ஒரு ஆவணமும் அல்லது இதரபொருட்களும், தலைப்பு 5 ன் பிரிவு 552 ன் கீழ் வெளிப் படுத்தப் படுவதில் இருந்து விலக்கு அளிக்கப் படும் மற்றும், அத்தகைய ஒரு வேண்டுகோளுக்கு அட்டர்னி ஜெனரல் பதில் அளித்தாலும் அளிக்கா விட்டாலும் அல்லது பிணையத்தை வழங்கியவர் ஒரு பதிலைப் பெறுவதற்கு முன்னதாக அத்தகைய வேண்டுகோளை திரும்பப் பெற்றாலும் திரும்பப் பெறாவிட்டாலும் பிணையத்தை வழங்கியவரின் ஒப்புதல் இருந்தால் ஒழிய, பொதுவாக எல்லோருக்கும் கிடைக்கச் செய்யப் படக் கூடாது.

(3) பத்தி (1) ன் கீழ் அட்டர்னி ஜெனரலுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ள பிணைத்தை வழங்கியவர் எவரும் அத்தகைய வேண்டுகோளுக்கு பதில் அளிக்கும் விதமாக அட்டர்னி ஜெனரல் ஒரு கருத்தை வழங்குகிற நேரத்திற்கு முன்னதாக அத்தகைய வேண்டுகோளை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு திரும்பப் பெறப்பட்ட எந்த ஒரு வேண்டுகோளும் எந்த ஒரு சக்தியையோ அல்லது விளைவையோ கொண்டிருக்காது.

(4) அட்டர்னி ஜெனரல் , இந்தப் பிரிவின் முந்தைய விதிகளைப் பொறுத்து நீதித் துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கை தொடர்பான  உரிய நேரத்திலான வழிகாட்டலை, நடைமுறைக் கேற்ற அதிகபட்ச அளவில், அத்தகைய விதிகள் தொடர்புடைய பிரச்சினைகள் மீது சிறப்பு ஆலோசனை பெற இயலாத சாத்தியமுள்ள ஏற்றுமதியாளர்கள்

மற்றும் சிறு வணிகங்களுக்கு வழங்குவார். அத்தகைய வழிகாட்டல், இந்தப் பிரிவின் முந்தைய விதிகள் தொடர்பான நீதித் துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கையுடன் மற்றும் இந்தப் பிரிவின் முந்தைய விதிகளின் கீழ் உள்ள இணக்கமாக உள்ள பொறுப்புகளின் மற்றும் சாத்தியமுள்ள சட்டக் கடப்பாடுகளின் பொதுவான விளக்கங்கள் ஆகியவற்றுடன், எதிர்காலத்தில் நிகழக்கூடிய வாய்ப்புள்ள குறிப்பிட்ட நடத்தைகளின் இணங்கி இருத்தல் தொடர்பான பத்தி (1) ன் கீழ் உள்ள வேண்டுகோள்களுக்குரிய பதில்களுக்கு மட்டுமே வரையறுக்கப் பட்டது ஆகும்.

**(f) வரையறைகள்**

இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக:

(i) A) "வெளிநாட்டு அதிகாரி" என்ற பதம் ஒரு வெளிநாட்டு அரசின் அல்லது எந்த ஒரு துறையின், முகமையின், அல்லது வழிவகையின் அவற்றின், அல்லது ஒரு பொது சர்வதேச அமைப்பின் எந்த ஒரு அதிகாரி அல்லது ஊழியர், அல்லது அத்தகைய அரசு அல்லது துறை, முகமை, அல்லது வழிவகைக்காக அல்லது அவற்றின் சார்பாக, அல்லது அத்தகைய எந்த ஒரு பொது சர்வதேச அமைப்புக்காக அல்லது அதன் சார்பாக ஒரு அதிகார பூர்வ திறனில் செயல் படுகிற எந்த ஒரு நபரையும் அர்த்தப் படுத்துவதாகும்.

(B) உள்பத்தி (A) யின் நோக்கங்களுக்காக, "பொது சர்வதேச அமைப்பு" என்ற பதம் பின்வருவனவற்றை அர்த்தப் படுத்துவதாகும் --

(i) சர்வதேச அமைப்புகள் சட்ட விலக்களிப்புச் சட்டத்தின் (22 U.S.C. § 288) பிரிவு 1 க்கு ஏற்ப செயலாக்க ஆணை மூலம் நியமிக்கப் பட்டுள்ள ஒரு நிறுவனம்; அல்லது

(ii) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, ஜனாதிபதியால் செயலாக்க ஆணை மூலம் நியமிக்கப் பட்டுள்ள, ஃபெடரல் பதிவேட்டில் உள்ள அத்தகைய ஆணையின் பதிப்பு தேதிக்கு ஏற்ப அமலுக்கு வந்த வேறு எந்த ஒரு சர்வதேச அமைப்பு.

(2) (A) ஒரு நடத்தை, சூழ்நிலை, அல்லது விளைவை பொறுத்தவரையில் அதனை "அறிந்திருக்கிற" ஒரு நபரின் மன நிலை, அதாவது பின்வரும் பட்சத்தில்--

(i) அத்தகைய நபர் அத்தகைய நடத்தையில் தான் ஈடுபடுவது பற்றி, அத்தகைய சூழ்நிலை உள்ளது என்பது பற்றி, அல்லது அத்தகைய விளைவு

கணிசமான அளவு நிச்சயமாக நிகழ உள்ளது என்பது பற்றி தெரிந்துள்ளார்; அல்லது

(ii) அத்தகைய சூழ்நிலை உள்ளது அல்லது அத்தகைய விளைவு கணிசமான அளவு நிச்சயமாக நிகழ உள்ளது என உறுதியான நம்பிக்கையை அத்தகைய நபர் கொண்டுள்ளார்.

(B) ஒரு குறிப் பிட்ட சூழ்நிலையின் இருப்பு பற்றிய அறிவு ஒரு குற்றத்திற்கு தேவைப் படுகிற போது, அத்தகைய சூழ்நிலை இல்லை என ஒரு நபர் உண்மையிலே் நம்பினால் ஒழிய, அத்தகைய சூழ்நிலையின் இருப்புக்கான நிகழ்தக வு உயரளவில் உள்ளது பற்றி அந்த நபர் தெரிந்திருக்கிற பட்சத்தில் அத்தகைய அறிவு நிறுவப் படுகிறது.

(3) (A) " வழமையான அரசு நடவடிக்கை" என்ற பதம் பின்வருவனவற்றில் ஒரு வெளிநாட்டு அதிகாரியால் சாதாரணமாகவும் பொதுவாகவும் மேற்கொள்ளப்படுகிற ஒரு நடவடிக்கையை மட்டும் அர்த்தப் படுத்துவதாகும்.--

(i) ஒரு வெளிநாட்டில் வணிகம் செய்வதற்கு ஒரு நபர் தகுதி பெறுவதற்குரிய அனுமதிகள், உரிமங்கள், அல்லது இதர அதிகாரப் பூர்வ ஆவணங்களைப் பெறுவதில்;

(ii) விசா மற்றும் பணி ஆணைகள் போன்ற அரசு பத்திரங்களை செயலாக்குவதில்;

(iii) காவல் துறை பாதுகாப்பு, அஞ்சல்களை எடுத்துச் செல்லுதல் மற்றும் விநியோகித்தல், அல்லது ஒப்பந்த செயல்பாடு தொடர்புடைய ஆய்வுகளை அல்லது நாடு முழுவதும் இருந்து சரக்குகளை எடுத்துச் செல்லுதல் தொடர்புடைய ஆய்வுகளை திட்டமிடல்;

(iv) தொலைபேசி சேவை, மின்னாற்றல் மற்றும் தண்ணீர் வழங்கல், சரக்குகளை ஏற்றி இறக்குதல், அல்லது அழிகேடு அடைவில் இருந்து விரைவில் அழியக் கூடிய பொருட்கள் அல்லது சரக்குகளை பாதுகாத்தல்; அல்லது

(v) அது போன்ற இயல்பிலான நடவடிக்கைகள்.

(B) “  வழமையான அரசு நடவடிக்கை”   என்ற பதம், ஒரு குறிப் பிட்ட கட்சிக்கு புதிய வணிகத்தை வழங்குவதற்கு அல்லது அதனுடனான வணிகத்தை தொடர்வதற்கு ஒரு வெளிநாட்டு அதிகாரியால் எடுக்கப் படுகிற எந்த ஒரு முடிவையும், அல்லது ஒரு குறிப் பிட்ட கட்சிக்கு புதிய வணிகத்தை வழங்குவதற்கு அல்லது அதனுடனான வணிகத்தை தொடர்வதற்குரிய ஒரு முடிவை ஊக்குவிக்கும் முடிவு எடுத்தல் செயலாக்கத்தில் தொடர்புடைய ஒரு வெளிநாட்டு அதிகாரியால் எடுக்கப்படுகிற எந்த ஒரு நடவடிக்கையையும் அவர் மேற்கொண்டாலும் மேற்கொள்ளா விட்டாலும் அல்லது என்ன நிபந்தனைகளின் மீது இருந்தாலும் இல்லாவிட்டாலும் இவற்றை உள்ளடக்கியது அல்ல.

**(g) மாற்று  சட்ட  அதிகார எல்லை**

(1) அமெரிக்காவின் அல்லது அதன் ஒரு மாநிலத்தின், பிரதேசத்தின், உடைமையின், அல்லது அமெரிக்க காமன்வெல்த்தின் அல்லது ஒரு அரசியல் உட்பிரிவின் அவற்றைப் போன்றவற்றின் சட்டங்களின் கீழ் ஒழுங்கு படுத்தப் பட்ட மற்றும் இந்தத் தலைப்பின் பிரிவு 12 க்கு ஏற்ப பதிவு செய்யப் பட்ட  பிணையங்களின் வகுப்பு ஒன்றினைக் கொண்டுள்ள அல்லது இந்தத் தலைப்பின் பிரிவு 15 (d) ன் கீழ் அறிக்கைகளை தாக்கல் செய்ய வேண்டியிருக்கிற பிணைத்தை வழங்கியவர் எவரும்,  அல்லது அத்தகைய பிணையத்தை வழங்கியவரின் அதிகாரி, நெறியாளுநர், ஊழியர், அல்லது முகவராக உள்ள எந்த ஒரு அமெரிக்க நபரும் அல்லது அத்தகைய  பிணையத்தை வழங்கியவரின் சார்பாக அதிலிருந்து செயல் படுகிற ஒரு பங்குதாரர் உள்ளிட்ட எவரும், இந்த உட்பிரிவு (a) ன் பத்திகள் (1), (2), மற்றும் (3) ல் நிர்ணயிக்கப் பட்டுள்ள, இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக அவற்றினூடே நிர்ணயிக்கப் பட்டுள்ள எந்த ஒரு நபர்களுக்கும் அல்லது நிறுவனங்களுக்கும்  ஒரு சலுகையின் காரிய முன்னேற்றத்தில், கொடுப்பனவில், செலுத்துவதற்கு வாக்குறுதி அளிப்பதில் அல்லது எந்த ஒரு பணம், அல்லது சலுகை, பரிசு ஆகியவற்றின் கொடுப்பனவில் அதிகாரமளிப்பதில்,கொடுப்பதற்கு வாக்குறுதி அளிப்பதில்,  அல்லது  மதிப்புடைய எதையும் கொடுப்பது பற்றி அதிகாரமளிப்பதில், அத்தகைய பிணையத்தை வழங்கியவர் அல்லது அத்தகைய அதிகாரி, நெறியாளுநர், ஊழியர், அல்லது முகவர் அல்லது பங்குதாரர், அத்தகைய சலுகையின் காரிய முன்னேற்றத்தில், கொடுப்பனவில், செலுத்துவதற்கு வாக்குறுதி அளிப்பதில் அல்லது அதிகாரமளிப்பதில் மாநிலங்களுக்கு இடையிலான வணிகத்தின் அஞ்சல்களையோ அல்லது எந்தவொரு வழி முறைகளையோ அல்லது வழி வகைகளையோ பயன் படுத்தி இருந்தாலும் பயன்

படுத்தாமல் இருந்தாலும், அமெரிக்காவிற்கு வெளியே நேர்மையற்ற முறையில் எந்த ஒரு நடவடிக்கையில் ஈடு படுவதும் சட்ட விரோதமாகும்.

(2) இந்த உட்பிரிவில் பயன் படுத்தப் படும், " அமெரிக்க நபர்" என்ற பதம், அமெரிக்கக் நாட்டைச் சேர்ந்தவர் (குடிவரவு மற்றும் தேசியச் சட்டத்தின் பிரிவு 101 ல் (8 U.S.C. § 1101) வரையறுக்கப் பட்டுள்ளதற்கு ஏற்ப) அல்லது எந்த ஒரு கூட்டு நிறுவனங்கள், கூட்டாண்மை, கூட்டமைப்பு, கூட்டுப்பங்கு நிறுவனம், வணிக அறக்கட்டளை, இன்கார்ப்பரேட் செய்யப் படாத அமைப்பு, அல்லது அமெரிக்காவின் அல்லது அதன் எந்த ஒரு பிரதேசத்தின், உடைமையின், அல்லது அமெரிக்க காமன்வெல்த்தின் அல்லது அவற்றைப் போன்றவற்றின் எந்த ஒரு அரசியல் உட்பிரிவின் சட்டங்களின் கீழ் ஒழுங்கு படுத்தப் பட்ட முழுப் பொறுப்பும் உரிமையும் கொண்டிருக்கும் தனி ஒருவரால் நடத்தப் படும் வணிகம் உள்ளிட்டவற்றை அர்த்தப் படுத்துவதாகும்.

**§ 78 dd - 2. உள்நாட்டு நிறுவனங்களால் மேற் கொள்ளப் படக்கூடாது என தடை செய்யப் பட்டுள்ள வெளிநாட்டு வர்த்தக நடை முறைகள்**

**(a) தடை**

இந்த தலைப்பின் பிரிவு 78 dd -1 க்கு உட்பட்ட ஒரு பிணையத்தை வழங்கியவரைத் தவிர வேறு எந்த ஒரு உள்நாட்டு நிறுவனமும், அல்லது அத்தகைய உள்நாட்டு நிறுவனத்தின் அதிகாரி, நெறியாளுநர், ஊழியர், அல்லது முகவர் எவரும் அல்லது அத்தகைய உள்நாட்டு நிறுவனத்தின் சார்பாக அதிலிருந்து செயல்படுகிற பங்குதாரர் எவரும் பின்வருவனவற்றுக்காக ஒரு சலுகையின் காரிய முன்னேற்றத்தில், கொடுப்பனவில், செலுத்துவதற்கு வாக்குறுதி அளிப்பதில், அல்லது எந்த ஒரு பணம், அல்லது சலுகை, பரிசு ஆகியவற்றின் கொடுப்பனவில் அதிகாரமளிப்பதில், கொடுப்பதற்கு வாக்குறுதி அளிப்பதில், அல்லது மதிப்புடைய எதையும் கொடுப்பதாக அதிகாரமளிப்பதில் மாநிலங்களுக்கு இடையிலான வணிகத்தின் அஞ்சல்களையோ அல்லது எந்தவொரு வழிமுறைகளையோ அல்லது வழிவகைகளையோ நேர்மையின்றி பயன் படுத்துவது சட்ட விரோதமாகும்.--

(1) எந்த ஒரு வெளிநாட்டு அதிகாரிக்கும் பின்வரும் நோக்கங்களுக்காக--

(A) (i) அத்தகைய வெளிநாட்டு அதிகாரி தன்னுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டு எடுக்கிற எந்த ஒரு செயல் அல்லது முடிவையும் பாதிக்கிற வகையில் நடத்தல், (ii) அத்தகைய அதிகாரியின் சட்டப் பூர்வமான கடமையை மீறுகிற எந்த ஒரு செயலையும் செய்வதற்கு அல்லது செய்யாமல் தவறுவதற்கு அத்தகைய வெளிநாட்டு அதிகாரியை தூண்டுதல், அல்லது (iii) எந்த ஒரு முறையற்ற சாதக நலன்களையும் உறுதி செய்தல்; அல்லது

(B) எந்த ஒரு நபருக்கான அல்லது அவருடன் சேர்ந்து செய்கிற வணிகத்தைப் பெறுவதில் அல்லது தக்கவைப்பதில், அல்லது அவருக்கு வணிகத்தை திசை திருப்பி விடுவதில், அத்தகைய பிணையத்தை வழங்கியவருக்கு உதவும் பொருட்டு

அத்தகைய வெளிநாட்டு அதிகாரியானவர் ஒரு வெளிநாட்டு அரசின் அல்லது வழிவகைகளின் எந்த ஒரு செயல் அல்லது முடிவை பாதிக்கும் வகையில் அல்லது தாக்கத்தை ஏற்படுத்திடும் வகையில் தனது செல்வாக்கை அத்தகைய ஒரு அரசுடன் அல்லது வழி வகைகளுடன் பயன் படுத்துவதற்கு தூண்டுதல்;

(2) பின்வரும் நோக்கங்களுக்காக எந்த ஒரு வெளிநாட்டு அரசியல் கட்சியையோ அல்லது அதிகாரியையோ அவற்றைப் போன்ற அல்லது வெளிநாட்டு அரசியல் அலுவலகத்திற்கான எந்த ஒரு வேட்பாளரையோ--

(A) (i) அத்தகைய கட்சி, அதிகாரி, அல்லது வேட்பாளர் தனது அல்லது தமது அதிகார வரம்பிற்கு உட்பட்டு எடுக்கிற எந்த ஒரு செயல் அல்லது முடிவையும் பாதிக்கிற வகையில் நடத்தல், (ii) அத்தகைய கட்சி, அதிகாரி, அல்லது வேட்பாளரின் சட்டப் பூர்வமான கடமையை மீறுகிற எந்த ஒரு செயலையும் செய்வதற்கு அல்லது செய்யாமல் தவறுவதற்கு அத்தகைய கட்சி, அதிகாரி, அல்லது வேட்பாளரை தூண்டுதல், அல்லது (iii) எந்த ஒரு முறையற்ற சாதக நலன்களையும் உறுதி செய்தல்; அல்லது

(B) எந்த ஒரு நபருக்கான அல்லது அவருடன் சேர்ந்து செய்கிற வணிகத்தைப் பெறுவதில் அல்லது தக்கவைப்பதில், அல்லது அவருக்கு வணிகத்தை திசை திருப்பி விடுவதில், அத்தகைய பிணையத்தை வழங்கியவருக்கு உதவும் பொருட்டு

அத்தகைய அரசு அல்லது வழி வகைகளின் எந்த ஒரு செயல் அல்லது முடிவை பாதிக்கும் வகையில் அல்லது தாக்கத்தை ஏற்படுத்திடும் வகையில் ஒரு வெளிநாட்டு அரசுடன்

அல்லது வழிவகைகள் போன்றவற்றுடன் தனது அல்லது தமது செல்வாக்கை பயன் படுத்துவதற்கு அத்தகைய கட்சி, அதிகாரி, அல்லது வேட்பாளரை தூண்டுதல் ; அல்லது

(3) அத்தகைய பணம் மதிப்புடைய பொருளின் முழுமையோ அல்லது ஒரு பகுதியோ, எந்த ஒரு வெளிநாட்டு அதிகாரிக்கு, எந்த ஒரு வெளிநாட்டு அரசியல் கட்சிக்கோ அல்லது அதிகாரிக்கோ அவற்றைப் போன்றவற்றுக்கோ, அல்லது வெளிநாட்டு அரசியல் அலுவலகத்திற்கான எந்த ஒரு வேட்பாளருக்கோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்கப் பட உள்ளது, கொடுக்கப் பட உள்ளது அல்லது வாக்குறுதி அளிக்கப் பட்டுள்ளது என அறிந்திருக்கிற அதே வேளையில் எந்த ஒரு நபரும் பின்வரும் நோக்கங்களுக்காக--

(A) (i) அத்தகைய வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, கட்சி அதிகாரி, அல்லது வேட்பாளர் தனது அல்லது தமது அதிகார வரம்பிற்கு உட்பட்டு எடுக்கிற எந்த ஒரு செயல் அல்லது முடிவையும் பாதிக்கிற வகையில் நடத்தல், (ii) அத்தகைய வெளிநாட்டு அதிகாரியின், அரசியல் கட்சியின், கட்சி அதிகாரியின், அல்லது வேட்பாளரின் அத்தகைய வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, கட்சி அதிகாரி, அல்லது வேட்பாளரின் சட்டப் பூர்வமான கடமையை மீறுகிற எந்த ஒரு செயலையும் செய்வதற்கு அல்லது செய்யாமல் தவறுவதற்கு தூண்டுதல், அல்லது (iii) எந்த ஒரு முறையற்ற சாதக நலன்களையும் உறுதி செய்தல்; அல்லது

(B) எந்த ஒரு நபருக்கான அல்லது அவருடன் சேர்ந்து செய்கிற வணிகத்தைப் பெறுவதில் அல்லது தக்கவைப்பதில், அல்லது அவருக்கு வணிகத்தை திசை திருப்பி விடுவதில், அத்தகைய பிணையத்தை வ ழங்கியவருக்கு உதவும் பொருட்டு

அத்தகைய வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, கட்சி அதிகாரி, அல்லது வேட்பாளர் ஒரு வெளிநாட்டு அரசுடன் அல்லது வழி வகைகளுடனான அவற்றிலிருந்து அத்தகைய அரசு அல்லது வழிவகைகளின் எந்த ஒரு செயல் அல்லது முடிவை பாதிக்கும் வகையில் அல்லது தாக்கத்தை ஏற்படுத்திடும் வகையில் தனது அல்லது தமது செல்வாக்கை பயன் படுத்துவதற்கு தூண்டுதல்.

**(b) வழமையான அரசு நடவடிக்கைக்கான விதிவிலக்கு**

இந்தப் பிரிவின் உட்பிரிவுகள் (a) மற்றும் (i) ஒரு வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, அல்லது கட்சி அதிகாரியால் செய்யப் படுகிற ஒரு வழமையான அரசு நடவடிக்கையின் செயல் பாட்டை துரிதப்படுத்துவதற்கு அல்லது பெறுவதற்குரிய நோக்கத்துடன் ஒரு வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, அல்லது கட்சி அதிகாரிக்கு அளிக்கப் படுகிற எந்த ஒரு எளிதாக்குகிற அல்லது துரிதப்படுத்துகிற கொடுப்பனவிற்கு பொருந்தாது.

**(c) உடன்பாடான தற்காப்புகள்**

இந்தப் பிரிவின் உட்பிரிவு (a) அல்லது (i) ன் கீழ் உள்ள செயல்கள் ஒரு உடன்பாடான தற்காப்பாக கருதப்படும், அதாவது—

(1) கொடுக்கப் பட்ட மதிப்புடைய எந்த ஒரு கொடுப்பனவு, பரிசு, சலுகை, அல்லது வாக்குறுதியும், வெளிநாட்டு அதிகாரியின், அரசியல் கட்சியின், கட்சி அதிகாரியின், அல்லது வேட்பாளரின் நாட்டின் எழுத்துப் பூர்வமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளின் கீழ் சட்டப் பூர்வமாக இருக்க வேண்டும்; அல்லது

(2) கொடுக்கப் பட்ட மதிப்புடைய எந்த ஒரு கொடுப்பனவு, பரிசு, சலுகை, அல்லது வாக்குறுதி அல்லது செயல்பாடு உள்ளிட்டவற்றுடன் நேரடியாக தொடர்புடைய ஒரு வெளிநாட்டு அதிகாரி, கட்சி, கட்சி அதிகாரி, அல்லது வேட்பாளரால் அல்லது அவர்களின் சார்பாக ஏற்பட்ட பயணம் மற்றும் வாடகைத் தங்குவிடுதி செலவுகள் போன்றவை நியாயமான மற்றும் உண்மையான செலவாக இருக்க வேண்டும்.--

(A) பொருட்கள் அல்லது சேவைகளின் முன்னேற்றத்துக்கான ஆக்க முயற்சி, செயல் விளக்கம், அல்லது விளக்கம்; அல்லது

(B) ஒரு வெளிநாட்டு அரசுடன் அல்லது முகமை அவற்றைப் போன்றவற்றுடனான ஒரு ஒப்பந்தத்தை செயல் படுத்தல்.

**(d) தடை உத்தரவு நிவாரணம்**

(1) இந்தப் பிரிவின் உட்பிரிவு (a) அல்லது (i) ன் ஒரு மீறலை உள்ளடக்கிய எந்த ஒரு செயலில் அல்லது நடைமுறையில் ஈடுபட்டுள்ளதாக, அல்லது ஈடுபடுபட உள்ளதாக இந்தப் பிரிவுக்குப் பொருந்துகிற எந்த ஒரு உள்நாட்டு நிறுவனம், அல்லது அதிகாரி,

நெறியாளுநர், ஊழியர், அல்லது முகவர் அல்லது பங்குதாரர் அவற்றைப் போன்றவை அட்டர்னி ஜெனரலுக்கு தோன்றுகிற போது, அட்டர்னி ஜெனரல் தன் விருப்பத்திலான முடிவின் படி, அத்தகையை செயல் அல்லது நடைமுறையின் மீது, ஒரு முறையான காட்டப் படுதல் அடிப்படையில், உறுதிப் பத்திரம் இல்லாத ஒரு நிரந்தர தடை உத்தரவு அல்லது ஒரு தற்காலிக தடுப்பு ஆணையை உத்தரவிடுவதற்கு அமெரிக்காவின் பொருத்தமான மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் உரிமையியல் வழக்கை தொடுக்கலாம்.

(2)  இந்தப் பிரிவை அமலாக்குவதற்கு தேவையானவை மற்றும் முறையானவை என்று அட்டர்னி ஜெனரலின் கருதுவதன்படி,  எந்த ஒரு உரிமையியல் புலனாய்வின் நோக்கத்திற்காகவும், அட்டர்னி ஜெனரல் அல்லது அவர் நியமித்த பொறுப்பு அலுவலர் சத்தியப் பிரமாணங்கள் மற்றும் உறுதி மொழிகள், நீதி மன்ற அழைப்பாணை சாட்சிகள், சான்றுகளை எடுத்தல் உள்ளிட்டவற்றை நிர்வகிக்க அதிகாரமளிக்கப் பட்டுள்ளனர் மற்றும் அத்தகைய புலனாய்விற்கு தொடர்புடையது என  அட்டர்னி ஜெனரல் கருதும் எந்த ஒரு புத்தகங்கள், பத்திரங்கள், அல்லது இதரஆவணங்கள் அல்லது பொருட்களை உருவாக்க வலிந்து கோரலாம். அமெரிக்காவில் எந்த ஒரு இடத்திலும், அல்லது அதன் எந்த ஒரு பிரதேசத்திலும், உடைமையிலும், அல்லது அமெரிக்க காமன்வெல்த்திலும், விசாரணைக்காக நியமிக்கப் பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் இருந்து சாட்சிகளின் வருகை மற்றும் ஆவணசான்றை உருவாக்குதல் தேவைப் படலாம்.

(3) ஒருவேளை எந்த ஒரு நபராவது தனக்கு வழங்கப் பட்ட நீதிமன்ற அழைப்பாணைக்கு பிடி முரணான எதிர்ப்பு தெரிவிக்கிற அல்லது கீழ்ப் படியாது இருக்கிற சூழலில், அட்டர்னி ஜெனரல், சாட்சிகளின் வருகை மற்றும் வாக்குமூலம் மற்றும் புத்தகங்களின் உருவாக்கம் ஆகியவற்றை வலிந்து கோருவதில் அத்தகைய புலனாய்வு அல்லது நடவடிக்கை மேற் கொள்ளப் படுகிற, அல்லது அத்தகைய நபர் வசிக்கிற அல்லது வணிகம் மேற் கொள்கிற இடத்தின் சட்ட அதிகார எல்லைக்குள் இருக்கிற அமெரிக்காவின் எந்த ஒரு நீதி மன்றத்தையும் உதவி நாடி முறையிடலாம். அத்தகைய நபர் புலனாய்வின் கீழ் உள்ள விடயங்கள் தொடர்பாக பதிவேடுகளை உருவாக்குவதற்காக அல்லது வாக்குமூலம் அளிப்பதற்காக அட்டர்னி ஜெனரல் அல்லது அவர் நியமித்த பொறுப்பு அலுவலர் முன்பாக ஆஜராகுமாறு வலிந்து கோருகிற ஒரு ஆணையை அத்தகைய எந்த ஒரு நீதி மன்றமும் வழங்கலாம். நீதி மன்றத்தின் அத்தகைய ஆணைக்கு கீழ்ப்படிய எந்த ஒரு வகையிலாவது தவறுகிற பட்சத்தில், அவமதிப்பு அவற்றைப் போன்றதாக கருதப்பட்டு அத்தகைய நீதி மன்றத்தால் தண்டிக்கப் படலாம்.

அத்தகைய எ ந்த ஒரு நேர்வில் அனைத்து செயலாக்கங்களும் அத்தகைய நபர் வசிக்கிற அல்லது காணப் படக்கூடிய நீதி மன்ற மாவட்டத்தில் கடமையாற்றப் படலாம். அட்டர்னி ஜெனரல் உரிமையியல் புலனாய்வுகள் தொடர்புடைய இந்த உட்பிரிவின் விதிகளை செயல் படுத்துவதற்கு தேவையான அல்லது பொருத்தமான அத்தகைய விதிகளை உருவாக்கலாம்.

**(e) அட்டர்னி ஜெனரலால் வழங்கப்படும் வழிகாட்டு நெறிகள்**

அட்டர்னி ஜெனரல், ஆகஸ்ட் 23, 1988 ப் பிறகு 6 மாதங்களுக்கு மிகாத காலத்திற்குள், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, வணிகத்துறைச் செயலாளர், அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி, அரசுத் துறைச் செயலாளர், மற்றும் கருவூலத்துறைச் செயலாளர் உள்ளிட்டோருடன் கலந்தாலோசனை செய்த பிறகு, மற்றும் பொது அறிவிப்பு மற்றும் கருத்துரை நடைமுறைகள் ஊடாக ஆர்வமுள்ள நபர்கள் அனைவரின் கருத்துக்களையும் பெற்ற பிறகு, இந்தப் பிரிவுடன் இணங்கி உள்ளதற்குத் தக்க எந்த அள வுக்கு எளிதாக்க முடியும் என்றும் இந்தப் பிரிவின் முந்தைய விதிகளை மேலும் தெளிவு படுத்துவதன் மூலமாக வணிகச் சமூகத்திற்கு உதவிட முடியும் என்றும் தீர்மானிப்பார் மற்றும், அத்தகைய தீர்மானத்தின் அடிப்படையிலும் மற்றும் தேவையான மற்றும் பொருத்தமான அளவுக்கும் ஏற்ப, பின் வருவனவற்றை வழங்கலாம்--

(1) இந்தப் பிரிவின் முந்தைய விதிகளுடன் இணக்கமாக இருக்கும் எனஅட்டர்னி ஜெனரல் தீர்மானிக்கிற நீதித்  துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கையின் தேவைகளுக்கான ஏற்றுமதி விற்பனைகள் ஏற்பாடுகளின் பொதுவான வகைகள் மற்றும் வணிக ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய குறிப் பிட்ட நடத்தை வகைகளை விவரிக்கிற வழிகாட்டு நெறிகள்; மற்றும்

(2) இந்தப் பிரிவின் முந்தைய விதிகள் தொடர்பான நீதித் துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கையுடன் தங்கள் நடத்தை இணங்கி இருப்பதற்காக தன்னார்வத்தின் அடிப்படையில் உள்நாட்டு நிறுவனங்கள் பயன் படுத்தக் கூடிய பொதுவான முன்னெச்சரிக்கை நடைமுறைகள்.

தலைப்பு 5 ன் அத்தியாயம் 5 ன் உள் அத்தியாயம் II ன் விதிகளுக்கு ஏற்ப இதற்கு முந்தைய வாக்கியத்தில் குறிப்பிடப் பட்டுள்ள வழிகாட்டு நெறிகள் மற்றும் நடை முறைகளை அட்டர்னி ஜெனரல் வழங்குவார் மற்றும் அத்தகைய வழிகாட்டு நெறிகள்

மற்றும் நடை முறைகள் அந்தத் தலைப்பின் அத்தியாயம் 7 ன் விதிகளுக்கு உட்பட்டு இருக்கும்.

**(f) அட்டர்னி ஜெனரலின் கருத்துக்கள்**

(1) அட்டர்னி ஜெனரல், அமெரிக்காவின் பொருத்தமான துறைகள் மற்றும் முகமைகளுடன் கலந்தாலோசனை செய்த பிறகு மற்றும் பொது அறிவிப்பு மற்றும் கருத்துரை நடைமுறைகள் ஊடாக ஆர்வமுள்ள நபர்கள் அனைவரின் கருத்துக்களையும் பெற்ற பிறகு, இந்தப் பிரிவின் முந்தைய விதிகள் தொடர்பான நீதித் துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கையுடன் தங்கள் நடத்தை இணங்கி இருப்பது தொடர்பாக உள்நாட்டு நிறுவனங்களால் கேட்கப் படும் குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதில்களை வழங்குவதற்குரிய ஒரு நடை முறையை நிறுவுவார். அட்டர்னி ஜெனரல், அத்தகைய ஒரு வேண்டுகோளை பெற்ற பிறகு 30 நாட்களுக்குள் அந்த வேண்டுகோளுக்கு பதில் அளிக்கும் விதமாக ஒரு கருத்தை வழங்குவார். எதிர்காலத்தில் நிகழக் கூடிய வாய்ப்புள்ள சில குறிப்பிட்ட நடத்தைகள் நீதித் துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கையின் தேவைகளுக்கான இந்தப் பிரிவின் முந்தைய விதிகளை மீறுகிறதா என்று அந்தக் கருத்து குறிப்பிடும். முந்தைய வேண்டுகோள்களில் குறிப்பிடப் பட்டுள்ள நடத்தை நோக்கத்திற்கு அப்பாற்பட்ட எதிர்காலத்தில் நிகழக் கூடிய வாய்ப்புள்ள இதர குறிப்பிட்ட நடத்தைகள் தொடர்பான கருத்துக்களுக்காக கூடுதல் வேண்டுகோள்களை அட்டர்னி ஜெனரலிடம் தாக்கல் செய்யலாம். இந்தப் பிரிவின் பொருந்தக் கூடிய விதிகளின் கீழ் கொண்டுவரப் படுகிற எந்த ஒரு நடவடிக்கையிலும், அதாவது ஒரு உள்நாட்டு நிறுவனத்தால் ஒரு வேண்டுகோளில் குறிப்பிடப் பட்டுள்ள ஒரு நடத்தை, மற்றும் இதற்காக அட்டர்னி ஜெனரல் ஒரு கருத்தை வழங்கியிருக்கிற அத்தகைய நடத்தையானது நீதித் துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கை உடன் ஒத்துப் போகிறதா, இந்தப் பிரிவின் முந்தைய விதிகளுடன் இணக்கமான முறையில் உள்ளதா என ஒரு மறுக்கத் தக்க அனுமானம் இருக்க வேண்டும். சான்றின் ஒரு விஞ்சு நிலையால் அத்தகைய ஒரு அனுமானம் மறுக்கப் படலாம். இந்தப் பத்தியின் தேவைகளுக்காக அனுமானத்தை கருதுகையில், அட்டர்னி ஜெனரலிடம் சமர்ப்பிக்கப் பட்ட தகவல்கள் துல்லியமானவையாக உள்ளனவா மற்றும் அட்டர்னி ஜெனரலால் பெறப் பட்ட எந்த ஒரு வேண்டுகோளிலும் குறிப்பிடப் பட்ட நடத்தை நோக்கத்திற்குள் உள்ளனவா என்பன உள்ளடக்கிய மற்றும் இவை மட்டும் தான் என்று வரையறைக்குள் இல்லாத படி சம்பந்தப் பட்ட அனைத்து காரணிகளையும் ஒரு நீதி மன்றம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தலைப்பு 5 ன் அத்தியாயம் 5 ன் உள் அத்தியாயம் II ன் விதிகளுக்கு

ஏற்ப அட்டர்னி ஜெனரல் இந்தப் பத்தியால் தேவைப்படும் நடைமுறையை நிறுவுவார் மற்றும் அந்த நடைமுறை அந்தத் தலைப்பின் அத்தியாயம் 7 ன் விதிகளுக்கு உட்பட்டு இருக்கும்.

(2) பத்தி (1) ன் கீழ் நிறுவப் பட்ட நடைமுறையின் கீழ் ஒரு உள்நாட்டு நிறுவனத்தால் விடுக்கப் பட்ட வேண்டுகோளுடன் தொடர்புடைய அமெரிக்காவின் நீதித் துறை அல்லது வேறு ஏதாவது துறை அல்லது முகமையில் தயாரிக்கப் பட்ட அல்லது உள்ளிட்டோருக்கு வழங்கப் பட்ட, உள்ளிட்டோரால் பெறப் பட்ட, எந்த ஒரு ஆவணமும் அல்லது இதர பொருட்களும், தலைப்பு 5 ன் பிரிவு 552 ன் கீழ் வெளிப்படுத்தப் படுவதில் இருந்து விலக்கு அளிக்கப் படும் மற்றும், அத்தகைய ஒரு வேண்டுகோளுக்கு அட்டர்னி ஜெனரல் பதில் அளித்தாலும் அளிக்கா விட்டாலும் அல்லது உள்நாட்டு நிறுவனம் ஒரு பதிலைப் பெறுவதற்கு முன்னதாக அத்தகைய வேண்டுகோளை திரும்பப் பெற்றாலும் திரும்பப் பெறாவிட்டாலும் உள்நாட்டு நிறுவனத்தின் ஒப்புதல் இருந்தால் ஒழிய, பொதுவாக எல்லோருக்கும் கிடைக்கச் செய்யப் படக்கூடாது.

(3) பத்தி (1) ன் கீழ் அட்டர்னி ஜெனரலுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ள எந்த ஒரு உள்நாட்டு நிறுவனமும் அத்தகைய வேண்டுகோளுக்கு பதில் அளிக்கும் விதமாக அட்டர்னி ஜெனரல் ஒரு கருத்தை வழங்குகிற நேரத்திற்கு முன்னதாக அத்தகைய வேண்டுகோளை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு திரும்பப் பெறப் பட்ட எந்த ஒரு வேண்டுகோளும் எந்த ஒரு சக்தியையோ அல்லது விளைவையோ கொண்டிருக்காது.

(4) அட்டர்னி ஜெனரல் , இந்தப் பிரிவின் முந்தைய விதிகளைப் பொறுத்து நீதித் துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கை தொடர்பான உரிய நேரத்திலான வழிகாட்டலை, நடைமுறைக் கேற்ற அதிகபட்ச அளவில், அத்தகைய விதிகள் தொடர்புடைய பிரச்சினைகள் மீது சிறப்பு ஆலோசனை பெற இயலாத சாத்தியமுள்ள ஏற்றுமதியாளர்கள் மற்றும் சிறு வணிகங்களுக்கு வழங்குவார். அத்தகைய வழிகாட்டல், இந்தப் பிரிவின் முந்தைய விதிகள் தொடர்பான நீதித் துறையின் நடப்பு அமலாக்கக் கொள்கையுடன் மற்றும் இந்தப் பிரிவின் முந்தைய விதிகளின் கீழ் உள்ள இணக்கமாக உள்ள பொறுப்புகளின் மற்றும் சாத்தியமுள்ள சட்டக் கடப்பாடுகளின் பொதுவான விளக்கங்கள் ஆகியவற்றுடன், எதிர்காலத்தில் நிகழக் கூடிய வாய்ப்புள்ள குறிப்பிட்ட நடத்தைகளின் இணங்கி இருத்தல் தொடர்பான பத்தி (1)ன் கீழ் உள்ள வேண்டுகோள்களுக்குரிய பதில்களுக்கு மட்டுமே வரையறுக்கப் பட்டது ஆகும்.

**(g) அபராதங்கள்**

(1) (A) இந்தப் பிரிவின் உட்பிரிவு  (a) அல்லது (i) யை மீறுகிற ஒரு இயற்கையான நபராக அல்லாத எந்த ஒரு உள்நாட்டு நிறுவனத்தின் மீதும் $2,000,000 மிகாத அபராதம் விதிக்கப் படும்.

(B) அட்டர்னி ஜெனரலால் கொண்டு வரப்படுகிற ஒரு நடவடிக்கையில், இந்தப் பிரிவின் உட்பிரிவு (a) அல்லது (i) யை மீறுகிற ஒரு இயற்கையான நபராக அல்லாத எந்த ஒரு உள்நாட்டு நிறுவனத்தின் மீதும் $10,000 மிகாத உரிமையியல் அபராதம் விதிக்கப் படுவதற்கு உட்பட்டு இருக்கும்.

(2) (A) ஒரு உள்நாட்டு நிறுவனத்தின் அதிகாரி, நெறியாளுநர், ஊழியர், அல்லது முகவர் அல்லது அத்தகைய உள்நாட்டு நிறுவனத்தின் சார்பாக செயல்படுகிற பங்குதாரர் உள்ளிட்ட, இந்தப் பிரிவின் உட்பிரிவு  (a) அல்லது (i)யை வேண்டுமென்றே மீறுகிற எந்த ஒரு இயற்கையான நபரின் மீதும் $100,000 மிகாத அபராதம் அல்லது 5 ஆண்டுகள் மிகாத சிறைத்தண்டனை, அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

(B) அட்டர்னி ஜெனரலால் கொண்டு வரப்படுகிற ஒரு நடவடிக்கையில், ஒரு உள்நாட்டு நிறுவனத்தின் அதிகாரி, நெறியாளுநர், ஊழியர், அல்லது முகவர் அல்லது அத்தகைய உள்நாட்டு நிறுவனத்தின் சார்பாக செயல்படுகிற பங்குதாரர் உள்ளிட்ட, இந்தப் பிரிவின் உட்பிரிவு  (a) அல்லது (i)யை மீறுகிற எந்த ஒரு இயற்கையான நபரின் மீதும் $10,000 மிகாத உரிமையியல் அபராதம் விதிக்கப்படுவதற்கு உட்பட்டு இருக்கும்.

(3) பத்தி (2)ன் கீழ் ஒரு உள்நாட்டு நிறுவனத்தின் எந்த ஒரு அதிகாரி, நெறியாளுநர், ஊழியர், அல்லது முகவர் அல்லது பங்குதாரர் மீது ஒரு அபராதம் விதிக்கப் படுகிற போதெல்லாம், அத்தகைய உள்நாட்டு நிறுவனத்தால், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, அத்தகைய அபராதம், செலுத்தப் படமுடியாமல் போகலாம்.

**(h) வரையறைகள்**

இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக:

(1) "உள்நாட்டு நிறுவனம்" என்ற பதம் பின் வருவனவற்றை அர்த்தப் படுத்துவதாகும்--

(A) அமெரிக்காவின் குடிமகன், நாட்டைச் சேர்ந்தவர், எந்த ஒரு தனிநபர்; அல்லது அதில் குடியிருப்பவர்; மற்றும்

(B) தனது வணிகத்தின் தலைமை இடத்தை அமெரிக்காவில் கொண்டுள்ள, அல்லது அமெரிக்காவின் ஒரு மாநிலத்தின், அதன் ஒரு பிரதேசத்தின், உடைமையின், அல்லது அமெரிக்க காமன்வெல்த்தின் சட்டங்களின் கீழ் ஒழுங்குபடுத்தப் பட்ட எந்த ஒரு பெரு நிறுவனம், கூட்டாண்மை, கூட்டமைப்பு, கூட்டுப்பங்கு நிறுவனம், வணிக அறக்கட்டளை, இன்கார்ப்பரேட் செய்யப் படாத அமைப்பு, அல்லது முழுப் பொறுப்பும் உரிமையும் கொண்டிருக்கும் தனி ஒருவரால் நடத்தப் படும் வணிகம்.

(2) (A) " வெளிநாட்டு அதிகாரி" என்ற பதம் ஒரு வெளிநாட்டு அரசின் அல்லது எந்த ஒரு துறையின், முகமையின், அல்லது வழி வகையின் அவற்றின், அல்லது ஒரு பொது சர்வதேச அமைப்பின் எந்த ஒரு அதிகாரி அல்லது ஊழியர், அல்லது அத்தகைய அரசு அல்லது துறை, முகமை, அல்லது வழி வகைக்காக அல்லது அவற்றின் சார்பாக, அல்லது அத்தகைய எந்த ஒரு பொது சர்வதேச அமைப்புக்காக அல்லது அதன் சார்பாக ஒரு அதிகார பூர்வ திறனில் செயல் படுகிற எந்த ஒரு நபரையும் அர்த்தப் படுத்துவதாகும்.

(B) உள்பத்தி (A) யின் நோக்கங்களுக்காக, " பொது சர்வதேச அமைப்பு" என்ற பதம் பின் வருவனவற்றை அர்த்தப் படுத்துவதாகும்—

(i) சர்வதேச அமைப்புகள் சட்ட விலக்களிப்புச் சட்டத்தின் (22 U.S.C. § 288) பிரிவு 1 க்கு ஏற்ப செயலாக்க ஆணை மூலம் நியமிக்கப் பட்டுள்ள ஒரு நிறுவனம்; அல்லது

(ii) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, ஜனாதிபதியால் செயலாக்க ஆணை மூலம் நியமிக்கப் பட்டுள்ள, ஃபெடரல் பதிவேட்டில் உள்ள அத்தகைய ஆணையின் பதிப்பு தேதிக்கு ஏற்ப அமலுக்கு வந்த வேறு எந்த ஒரு சர்வதேச அமைப்பு.

(3) (A) ஒரு நடத்தை, சூழ்நிலை, அல்லது விளைவை பொறுத்தவரையில் அதனை " அறிந்திருக்கிற" ஒரு நபரின் ம ன நிலை, அதாவது பின்வரும் பட்சத்தில்--

(i) அத்தகைய நபர் அத்தகைய நடத்தையில் தான் ஈடு படுவது பற்றி, அத்தகைய சூழ்நிலை உள்ளது என்பது பற்றி, அல்லது அத்தகைய விளைவு கணிசமான அளவு நிச்சயமாக நிகழ உள்ளது என்பது பற்றி தெரிந்துள்ளார்;

(ii) அல்லது அத்தகைய சூழ்நிலை உள்ளது அல்லது அத்தகைய விளைவு கணிசமான அளவு நிச்சயமாக நிகழ உள்ளது என உறுதியான நம்பிக்கையை அத்தகைய நபர் கொண்டுள்ளார்.

(B) ஒரு குறிப் பிட்ட சூழ்நிலையின் இருப்பு பற்றிய அறிவு ஒரு குற்றத்திற்கு தேவைப் படுகிற போது, அத்தகைய சூழ்நிலை இல்லை என ஒரு நபர் உண்மையிலேே நம்பினால் ஒழிய, அத்தகைய சூழ்நிலையின் இருப்பு உயர் நிகழ்தகவில் உள்ளது பற்றி அந்த நபர் தெரிந்திருக்கிற பட்சத்தில் அத்தகைய அறிவு நிறுவப் படுகிறது.

(4) (A) " வழமையான அரசு நடவடிக்கை" என்ற பதம் பின்வருவனவற்றில் ஒரு வெளிநாட்டு அதிகாரியால் சாதாரணமாகவும் பொதுவாகவும் மேற்கொள்ளப் படுகிற ஒரு நடவடிக்கையை மட்டும் அர்த்தப் படுத்துவதாகும்.--

(i) ஒரு வெளிநாட்டில் வணிகம் செய்வதற்கு ஒரு நபர் தகுதி பெறுவதற்குரிய அனுமதிகள், உரிமங்கள், அல்லது இதர அதிகாரப் பூர்வ ஆவணங்களைப் பெறுவதில்;

(ii) விசா மற்றும் பணி ஆணைகள் போன்ற அரசு பத்திரங்களை செயலாக்குவதில்;

(iii) காவல் துறை பாதுகாப்பு, அஞ்சல்களை எடுத்துச் செல்லுதல் மற்றும் விநியோகித்தல், அல்லது ஒப்பந்த செயல்பாடு தொடர்புடைய ஆய்வுகளை அல்லது நாடு முழுவதும் இருந்து சரக்குகளை எடுத்துச் செல்லுதல் தொடர்புடைய ஆய்வுகளை திட்டமிடல்;

(iv) தொலைபேசி சேவை, மின்னாற்றல் மற்றும் தண்ணீர் வழங்கல், சரக்குகளை ஏற்றி இறக்குதல், அல்லது அழிகேடு அடைவில் இருந்து விரைவில் அழியக்கூடிய பொருட்கள் அல்லது சரக்குகளை பாதுகாத்தல்; அல்லது

(v) அது போன்ற இயல்பிலான நடவடிக்கைகள்.

(B) "  வழமையான அரசு நடவடிக்கை"   என்ற பதம், ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு புதிய வணிகத்தை வழங்குவதற்கு அல்லது அதனுடனான வணிகத்தை தொடர்வதற்கு ஒரு வெளிநாட்டு அதிகாரியால் எடுக்கப் படுகிற எந்த ஒரு முடிவையும், அல்லது ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு புதிய வணிகத்தை வழங்குவதற்கு அல்லது அதனுடனான வணிகத்தை தொடர்வதற்குரிய ஒரு முடிவை ஊக்குவிக்கும் முடிவு எடுத்தல் செயலாக்கத்தில் தொடர்புடைய ஒரு வெளிநாட்டு அதிகாரியால் எடுக்கப் படுகிற எந்த ஒரு நடவடிக்கையையும் அவர் மேற் கொண்டாலும் மேற் கொள்ளாவிட்டாலும் அல்லது என்ன நிபந்தனைகளின் மீது இருந்தாலும் இல்லா விட்டாலும் இவற்றை உள்ளடக்கியது அல்ல.

(5) "மாநிலங்களுக்கு இடையிலான வணிகம்" என்ற பதம், பல்வேறு மாநிலங்களுக்கு இடையேயான அல்லது எந்த ஒரு வெளிநாடு மற்றும் மாநிலத்திற்கு இடையேயான அல்லது எந்த ஒரு மாநிலத்திற்கும் மற்றும் எந்த ஒரு வெளியே உள்ள இடம் அல்லது கப்பல் அவற்றைப் போன்றவற்றுக்கும் இடையேயான வர்த்தகம், வணிகம், போக்குவரத்து, அல்லது தகவல் தொடர்பு உள்ளிட்டவற்றை அர்த்தப் படுத்துவதாகும் மற்றும் அத்தகைய பதம் பின் வருவனவற்றையும் உள்ளடக்கியதாகும்.—

(A) மாநிலங்களுக்கு இடையிலான ஒரு தொலைபேசி அல்லது இதர   தகவல்தொடர்பு வழிமுறைகள், அல்லது

(B) வேறு எந்த  ஒரு மாநிலங்களுக்கு இடையிலான வழி வகை.

**(i) மாற்று சட்ட அதிகார எல்லை**

(1) எந்த ஒரு அமெரிக்க நபரும்,  இந்த உட்பிரிவு (a) ன் பத்திகள் (1), (2), மற்றும் (3) ல் நிர்ணயிக்கப் பட்டுள்ள, இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக அவற்றினூடே நிர்ணயிக்கப் பட்டுள்ள எந்த ஒரு நபர்களுக்கும்  அல்லது நிறுவனங்களுக்கும்  ஒரு சலுகையின் காரிய முன்னேற்றத்தில், கொடுப்பனவில், செலுத்துவதற்கு வாக்குறுதி அளிப்பதில் அல்லது எந்த ஒரு பணம், அல்லது சலுகை, பரிசு ஆகியவற்றின் கொடுப்பனவில் அதிகாரமளிப்பதில், கொடுப்பதற்கு வாக்குறுதி அளிப்பதில், அல்லது  மதிப்புடைய எதையும் கொடுப்பது பற்றி அதிகாரமளிப்பதில், அத்தகைய அமெரிக்க நபர், அத்தகைய சலுகையின் காரிய முன்னேற்றத்தில், கொடுப்பனவில், செலுத்துவதற்கு வாக்குறுதி அளிப்பதில் அல்லது அதிகாரமளிப்பதில் மாநிலங்களுக்கு இடையிலான வணிகத்தின் அஞ்சல்களையோ அல்லது எந்தவொரு

வழிமுறைகளையோ அல்லது வழிவகைகளையோ பயன்படுத்தி இருந்தாலும் பயன்படுத்தாமல் இருந்தாலும், அமெரிக்காவிற்கு வெளியே நேர்மையற்ற முறையில் எந்த ஒரு நடவடிக்கையில் ஈடு படுவதும் சட்ட விரோதமாகும்.

(2) இந்த உட்பிரிவில் பயன் படுத்தப் படும், " அமெரிக்க நபர்" என்ற பதம், அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர் (குடிவரவு மற்றும் தேசியச் சட்டத்தின் பிரிவு 101 ல் (8 U.S.C. § 1101) வரையறுக்கப் பட்டுள்ளதற்கு ஏற்ப) அல்லது எந்த ஒரு கூட்டு நிறுவனங்கள், கூட்டாண்மை, கூட்டமைப்பு, கூட்டுப் பங்கு நிறுவனம், வணிக அறக்கட்டளை, இன்கார்ப்பரேட் செய்யப் ப டாத அமைப்பு, அல்லது அமெரிக்காவின் அல்லது அதன் எந்த ஒரு பிரதேசத்தின், உடைமையின், அல்லது அமெரிக்க காமன்வெல்த்தின் அல்லது அவற்றைப் போன்றவற்றின் எந்த ஒரு அரசியல் உட்பிரிவின் சட்டங்களின் கீழ் ஒழுங்கு படுத்தப் பட்ட முழுப் பொறுப்பும் உரிமையும் கொண்டிருக்கும் தனி ஒருவரால் நடத்தப் படும் வணிகம் உள்ளிட்டவற்றை அர்த்தப் படுத்துவதாகும்.

**§ 78 dd - 3. பிணையத்தை வழங்கியவர்கள் அல்லது உள்நாட்டு நிறுவனங்கள் தவிர வேறு நபர்களால் மேற்கொள்ளப் படக் கூடாது என தடை செய்யப் பட்டுள்ள வெளிநாட்டு வர்த்தக நடைமுறைகள்**

**(a) தடை**

1934 ம் ஆண்டின் பிணையங்கள் பரிவர்த்தனை சட்டத்தின் பிரிவு 30 A க்கு உட்பட்ட ஒரு பிணையத்தை வழங்கியவரைத் தவிர வேறு எந்த ஒரு நபரும் அல்லது இந்த சட்டத்தின் பிரிவு 104 ல் வரையறுக்கப் பட்டுள்ளதற்கு ஏற்ப எந்த ஒரு உள்நாட்டு நிறுவனமும் பின் வருவனவற்றுக்காக ஒரு சலுகையின் காரிய முன்னேற்றத்தில், கொடுப்பனவில், செலுத்துவதற்கு வாக்குறுதி அளிப்பதில், அல்லது எந்த ஒரு பணம், அல்லது சலுகை, பரிசு ஆகியவற்றின் கொடுப்பனவில் அதிகாரமளிப்பதில், கொடுப்பதற்கு வாக்குறுதி அளிப்பதில், அல்லது மதிப்புடைய எதையும் கொடுப்பதாக அதிகாரமளிப்பதில் மாநிலங்களுக்கு இடையிலான வணிகத்தின் அஞ்சல்களையோ அல்லது எந்தவொரு வழி முறைகளையோ அல்லது வழி வகைகளையோ நேர்மையின்றி பயன் படுத்துவது சட்ட விரோதமாகும்.

(1) எந்த ஒரு வெளிநாட்டு அதிகாரிக்கும் பின்வரும் நோக்கங்களுக்காக--

(A) (i) அத்தகைய வெளிநாட்டு அதிகாரி தன்னுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டு எடுக்கிற எந்த ஒரு செயல் அல்லது முடிவையும் பாதிக்கிற வகையில் நடத்தல், (ii) அத்தகைய அதிகாரியின் சட்டப் பூர்வமான கடமையை மீறுகிற எந்த ஒரு செயலையும் செய்வதற்கு அல்லது செய்யாமல் தவறுவதற்கு அத்தகைய வெளிநாட்டு அதிகாரியை தூண்டுதல், அல்லது (iii) எந்த ஒரு முறையற்ற சாதக நலன்களையும் உறுதி செய்தல்; அல்லது

(B) எந்த ஒரு நபருக்கான அல்லது அவருடன் சேர்ந்து செய்கிற வணிகத்தைப் பெறுவதில் அல்லது தக்கவைப்பதில், அல்லது அவருக்கு வணிகத்தை திசை திருப்பி விடுவதில், அத்தகைய பிணையத்தை வழங்கியவருக்கு உதவும் பொருட்டு

அத்தகைய வெளிநாட்டு அதிகாரியானவர் ஒரு வெளிநாட்டு அரசின் அல்லது வழி வகைகளின் எந்த ஒரு செயல் அல்லது முடிவை பாதிக்கும் வகையில் அல்லது தாக்கத்தை ஏற்படுத்திடும் வகையில் தனது செல்வாக்கை அத்தகைய ஒரு அரசுடன் அல்லது வழி வகைகளுடன் பயன் படுத்துவதற்கு தூண்டுதல்;

(2) பின்வரும் நோக்கங்களுக்காக எந்த ஒரு வெளிநாட்டு அரசியல் கட்சியையோ அல்லது அதிகாரியையோ அவற்றைப் போன்ற அல்லது வெளிநாட்டு அரசியல் அலுவலகத்திற்கான எந்த ஒரு வேட்பாளரையோ--

(A) (i) அத்தகைய கட்சி, அதிகாரி, அல்லது வேட்பாளர் தனது அல்லது தமது அதிகார வரம்பிற்கு உட்பட்டு எ டுக்கிற எந்த ஒரு செயல் அல்லது முடிவையும் பாதிக்கிற வகையில் நடத்தல், (ii) அத்தகைய கட்சி, அதிகாரி, அல்லது வேட்பாளரின் சட்டப் பூர்வமான கடமையை மீறுகிற எந்த ஒரு செயலையும் செய்வதற்கு அல்லது செய்யாமல் தவறுவதற்கு அத்தகைய கட்சி, அதிகாரி, அல்லது வேட்பாளரை தூண்டுதல், அல்லது (iii) எந்த ஒரு முறையற்ற சாதக நலன்களையும் உறுதி செய்தல்; அல்லது

(B) எந்த ஒரு நபருக்கான அல்லது அவருடன் சேர்ந்து செய்கிற வணிகத்தைப் பெறுவதில் அல்லது தக்கவைப்பதில், அல்லது அவருக்கு வணிகத்தை திசை திருப்பி விடுவதில், அத்தகைய பிணையத்தை வழங்கியவருக்கு உத வும் பொருட்டு

அத்தகைய அரசு அல்லது வழி வகைகளின் எந்த ஒரு செயல் அல்லது முடிவை பாதிக்கும் வகையில் அல்லது தாக்கத்தை ஏற்படுத்திடும் வகையில் ஒரு வெளிநாட்டு அரசுடன்

அல்லது வழிவகைகள் போன்றவற்றுடன் தனது அல்லது தமது செல்வாக்கை பயன் படுத்துவதற்கு அத்தகைய கட்சி, அதிகாரி, அல்லது வேட்பாளரை தூண்டுதல் ; அல்லது

(3) அத்தகைய பணம் மதிப்புடைய பொருளின் முழுமையோ அல்லது ஒரு பகுதியோ, எந்த ஒரு வெளிநாட்டு அதிகாரிக்கு, எந்த ஒரு வெளிநாட்டு அரசியல் கட்சிக்கோ அல்லது அதிகாரிக்கோ அவற்றைப் போன்றவற்றுக்கோ, அல்லது வெளிநாட்டு அரசியல் அலுவலகத்திற்கான எந்த ஒரு வேட்பாளருக்கோ நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ வழங்கப் பட உள்ளது, கொடுக்கப் பட உள்ளது அல்லது வாக்குறுதி அளிக்கப் பட்டுள்ளது என அறிந்திருக்கிற அதே வேளையில் எந்த ஒரு நபரும் பின்வரும் நோக்கங்களுக்காக--

(A) (i) அத்தகைய வெளிநாட்டு அதிகாரி, அர சியல் கட்சி, கட்சி அதிகாரி, அல்லது வேட்பாளர் தனது அல்லது தமது அதிகார வரம்பிற்கு உட்பட்டு எடுக்கிற எந்த ஒரு செயல் அல்லது முடிவையும் பாதிக்கிற வகையில் நடத்தல், (ii) அத்தகைய வெளிநாட்டு அதிகாரியின், அரசியல் கட்சியின், கட்சி அதிகாரியின், அல்லது வேட்பாளரின் அத்தகைய வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, கட்சி அதிகாரி, அல்லது வேட்பாளரின் சட்டப் பூர்வமான கடமையை மீறுகிற எந்த ஒரு செயலையும் செய்வதற்கு அல்லது செய்யாமல் தவறுவதற்கு தூண்டுதல், அல்லது (iii) எந்த ஒரு முறையற்ற சாதக நலன்களையும் உறுதி செய்தல்; அல்லது

(B) எந்த ஒரு நபருக்கான அல்லது அவருடன் சேர்ந்து செய்கிற வணிகத்தைப் பெறுவதில் அல்லது தக்கவைப்பதில், அல்லது அவருக்கு வணிகத்தை திசை திருப்பி விடுவதில், அத்தகைய பிணையத்தை வழங்கியவருக்கு உதவும் பொருட்டு

அத்தகைய வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, கட்சி அதிகாரி, அல்லது வேட்பாளர் ஒரு வெளிநாட்டு அரசுடன் அல்லது வழி வகைகளுடனான அவற்றிலிருந்து அத்தகைய அரசு அல்லது வழி வகைகளின் எந்த ஒரு செயல் அல்லது முடிவை பாதிக்கும் வகையில் அல்லது தாக்கத்தை ஏற்படுத்திடும் வகையில் தனது அல்லது தமது செல்வாக்கை பயன் படுத்துவதற்கு தூண்டுதல்.

**(b) வழமையான அரசு நடவடிக்கைக்கான விதிவிலக்கு**

இந்தப் பிரிவின் உட்பிரிவு (a) ஒரு வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, அல்லது கட்சி அதிகாரியால் செய்யப்படுகிற ஒரு வழமையான அரசு நடவடிக்கையின் செயல்பாட்டை துரிதப் படுத்துவதற்கு அல்லது பெறுவதற்குரிய நோக்கத்துடன் ஒரு வெளிநாட்டு அதிகாரி, அரசியல் கட்சி, அல்லது கட்சி அதிகாரிக்கு அளிக்கப்படுகிற எந்த ஒரு எளிதாக்குகிற அல்லது துரிதப் படுத்துகிற கொடுப்பனவிற்கு பொருந்தாது.

**(c) உடன் பாடான தற்காப்புகள்**

இந்தப் பிரிவின் உட்பிரிவு (a) ன் கீழ் உள்ள செயல்கள் ஒரு உடன் பாடான தற்காப்பாக கருதப்படும், அதாவது—

(1) கொடுக்கப் பட்ட மதிப்புடைய எந்த ஒரு கொடுப்பனவு, பரிசு, சலுகை, அல்லது வாக்குறுதியும், வெளிநாட்டு அதிகாரியின், அரசியல் கட்சியின், கட்சி அதிகாரியின், அல்லது வேட்பாளரின் நாட்டின் எழுத்துப் பூர்வமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளின் கீழ் சட்டப் பூர்வமாக இருக்க வேண்டும்; அல்லது

(2) கொடுக்கப் பட்ட  மதிப்புடைய எந்த ஒரு கொடுப்பனவு, பரிசு, சலுகை, அல்லது வாக்குறுதி அல்லது செயல்பாடு உள்ளிட்டவற்றுடன் நேரடியாக தொடர்புடைய ஒரு வெளிநாட்டு அதிகாரி, கட்சி, கட்சி அதிகாரி, அல்லது வேட்பாளரால் அல்லது அவர்களின் சார்பாக ஏற்பட்ட  பயணம் மற்றும் வாடகைத் தங்குவிடுதி செலவுகள் போன்றவை நியாயமான மற்றும் உண்மையான செலவாக இருக்க வேண்டும்.--

(A) பொருட்கள் அல்லது சேவைகளின் முன்னேற்றத்துக்கான ஆக்க முயற்சி, செயல் விளக்கம், அல்லது விளக்கம்; அல்லது

(B) ஒரு வெளிநாட்டு அரசுடன் அல்லது முகமை அவற்றைப் போன்றவற்றுடனான ஒரு ஒப்பந்தத்தை செயல் படுத்தல்.

**(d) தடை உத்தரவு நிவாரணம்**

(1) இந்தப் பிரிவின் உட்பிரிவு  (a) ஒரு மீறலை உள்ளடக்கிய எந்த ஒரு செயலில் அல்லது நடை முறையில் ஈடு பட்டுள்ளதாக, அல்லது ஈடுபடு பட  உள்ளதாக இந்தப் பிரிவுக்குப்

பொருந்துகிற எந்த ஒரு நபர், அல்லது அதிகாரி, நெறியாளுநர், ஊழியர், அல்லது முகவர் அல்லது பங்குதாரர் அவற்றைப் போன்றவை அட்டர்னி ஜெனரலுக்கு தோன்றுகிற போது, அட்டர்னி ஜெனரல் தன் விருப்பத்திலான முடிவின் படி, அத்தகையை செயல் அல்லது நடை முறையின் மீது, ஒரு முறையான காட்டப் படுதல் அடிப்படையில், உறுதிப் பத்திரம் இல்லாத ஒரு நிரந்தர தடை உத்தரவு அல்லது ஒரு தற்காலிக தடுப்பு ஆணையை உத்தரவிடுவதற்கு அமெரிக்காவின் பொருத்தமான மாவட்ட நீதி மன்றம் ஒன்றில் உரிமையியல் வழக்கை தொடுக்கலாம்.

(2) இந்தப் பிரிவை அமலாக்குவதற்கு தேவையானவை மற்றும் முறையானவை என்று அட்டர்னி ஜெனரலின் கருதுவதன் படி, எந்த ஒரு உரிமையியல் புலனாய்வின் நோக்கத்திற்காகவும், அட்டர்னி ஜெனரல் அல்லது அவர் நியமித்த பொறுப்பு அலுவலர் சத்தியப் பிரமாணங்கள் மற்றும் உறுதி மொழிகள், நீதி மன்ற அழைப்பாணை சாட்சிகள், சான்றுகளை எடுத்தல் உள்ளிட்டவற்றை நிர்வகிக்க அதிகாரமளிக்கப் பட்டுள்ளனர் மற்றும் அத்தகைய புலனாய்விற்கு தொடர்புடையது என அட்டர்னி ஜெனரல் கருதும் எந்த ஒரு புத்தகங்கள், பத்திரங்கள், அல்லது இதர ஆவணங்கள் அல்லது பொருட்களை உருவாக்க வலிந்து கோரலாம். அமெரிக்காவில் எந்த ஒரு இடத்திலும், அல்லது அதன் எந்த ஒரு பிரதேசத்திலும், உடைமையிலும், அல்லது அமெரிக்க காமன்வெல்த்திலும், விசாரணைக்காக நியமிக்கப் பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் இருந்து சாட்சிகளின் வருகை மற்றும் ஆவணசான்றை உருவாக்குதல் தேவைப் படலாம்.

(3) ஒரு வேளை எந்த ஒரு நபராவது தனக்கு வழங்கப் பட்ட நீதி மன்ற அழைப்பாணைக்கு பிடி முரணான எதிர்ப்பு தெரிவிக்கிற அல்லது கீழ்ப்படியாது இருக்கிற சூழலில், அட்டர்னி ஜெனரல், சாட்சிகளின் வருகை மற்றும் வாக்குமூலம் மற்றும் புத்தகங்களின் உருவாக்கம் ஆகியவற்றை வலிந்து கோருவதில் அத்தகைய புலனாய்வு அல்லது நடவடிக்கை மேற் கொள்ளப் படுகிற, அல்லது அத்தகைய நபர் வசிக்கிற அல்லது வணிகம் மேற் கொள்கிற இடத்தின் சட்ட அதிகார எல்லைக்குள் இருக்கிற அமெரிக்காவின் எந்த ஒரு நீதி மன்றத்தையும் உதவி நாடி முறையிடலாம். அத்தகைய நபர் புலனாய்வின் கீழ் உள்ள விடயங்கள் தொடர்பாக பதிவேடுகளை உருவாக்குவதற்காக அல்லது வாக்குமூலம் அளிப்பதற்காக அட்டர்னி ஜெனரல் அல்லது அவர் நியமித்த பொறுப்பு அலுவலர் முன்பாக ஆஜராகுமாறு வலிந்து கோருகிற ஒரு ஆணையை அத்தகைய எந்த ஒரு நீதி மன்றமும் வழங்கலாம். நீதி மன்றத்தின் அத்தகைய ஆணைக்கு கீழ்ப் படிய எந்த ஒரு வகையிலாவது தவறுகிற பட்சத்தில், அவமதிப்பு அவற்றைப் போன்றதாக கருதப்பட்டு அத்தகைய நீதி மன்றத்தால் தண்டிக்கப் படலாம்.

(4) அத்தகைய எந்த ஒரு நேர்வில் அனைத்து செயலாக்கங்களும் அத்தகைய நபர் வசிக்கிற அல்லது காணப் படக் கூடிய நீதி மன்ற மாவட்டத்தில் கடமையாற்றப் படலாம். அட்டர்னி ஜெனரல் உரிமையியல் புலனாய்வுகள் தொடர்புடைய இந்த உட்பிரிவின் விதிகளை செயல் படுத்துவதற்கு தேவையான அல்லது பொருத்தமான அத்தகைய விதிகளை உருவாக்கலாம்.

**(e) அபராதங்கள்**

(1) (A) இந்தப் பிரிவின் உட்பிரிவு (a) யை மீறுகிற எந்த ஒரு வழக்கு மன்ற நடவடிக்கை சார்ந்த நபரின் மீதும் $2,000,000 மிகாத அபராதம் விதிக்கப்படும்.

(B) அட்டர்னி ஜெனரலால் கொண்டு வரப்படுகிற ஒரு நடவடிக்கையில், இந்தப் பிரிவின் உட்பிரிவு (a) யை மீறுகிற எந்த ஒரு வழக்கு மன்ற நடவடிக்கை சார்ந்த நபரின் மீதும் $10,000 மிகாத உரிமையியல் அபராதம் விதிக்கப் படுவதற்கு உட்பட்டு இருக்கும்.

(2) (A) இந்தப் பிரிவின் உட்பிரிவு (a) யை வேண்டுமென்றே மீறுகிற எந்த ஒரு இயற்கையான நபரின் மீதும் $100,000 மிகாத அபராதம் அல்லது 5 ஆண்டுகள் மிகாத சிறைத் தண்டனை, அல்லது இரண்டும் விதிக்கப் படும்.

(B) அட்டர்னி ஜெனரலால் கொண்டு வரப் படுகிற ஒரு நடவடிக்கையில் இந்தப் பிரிவின் உட்பிரிவு (a) யை மீறுகிற எந்த ஒரு இயற்கையான நபரின் மீதும் $10,000 மிகாத உரிமையியல் அபராதம் விதிக்கப் படுவதற்கு உட்பட்டு இருக்கும்.

(3) பத்தி (2) ன் கீழ் ஒரு நபரின் எந்த ஒரு அதிகாரி, நெறியாளுநர், ஊழியர், அல்லது முகவர் அல்லது பங்குதாரர் மீது ஒரு அபராதம் விதிக்கப் படுகிற போதெல்லாம், அத்தகைய நபரால், நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ, அத்தகைய அபராதம், செலுத்தப் பட முடியாமல் போகலாம்.

**(f) வரையறைகள்**

இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக:

(1) “ நபர்“ என்ற பதம், ஒரு குற்றவாளியைக் குறிப்பிடும் போது, அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒருவரைத் (8 U.S.C. § 1101 ல் வரையறுக்கப் பட்டுள்ளதற்கு ஏற்ப) தவிர அல்லது ஒரு வெளிநாட்டின் அல்லது அவற்றைப் போன்றவற்றின் எந்த ஒரு அரசியல் உட்பிரிவின் சட்டத்தின் கீழ் உள்ள எந்த ஒரு பெரு நிறுவனம், கூட்டாண்மை, கூட்டமைப்பு, கூட்டுப் பங்கு நிறுவனம், வணிக அறக்கட்டளை, இன்கார்ப்பரேட் செய்யப் படாத அமைப்பு, அல்லது முழுப் பொறுப்பும் உரிமையும் கொண்டிருக்கும் தனி ஒருவரால் நடத்தப் படும் வணிகம் ஆகியவற்றைத் தவிர வேறு எந்த ஒரு இயற்கையான நபரின் மீதும் அர்த்தப் படுத்துவதாகும்.

(2) (A) “ வெளிநாட்டு அதிகாரி” என்ற பதம் ஒரு வெளிநாட்டு அரசின் அல்லது எந்த ஒரு துறையின், முகமையின், அல்லது வழிவகையின் அவற்றின், அல்லது ஒரு பொது சர்வதேச அமைப்பின் எந்த ஒரு அதிகாரி அல்லது ஊழியர், அல்லது அத்தகைய அரசு அல்லது துறை, முகமை, அல்லது வழிவகைக்காக அல்லது அவற்றின் சார்பாக, அல்லது அத்தகைய எந்த ஒரு பொது சர்வதேச அமைப்புக்காக அல்லது அதன் சார்பாக ஒரு அதிகார பூர்வ திறனில் செயல்படுகிற எந்த ஒரு நபரையும் அர்த்தப் படுத்துவதாகும்.

உள்பத்தி (A) யின் நோக்கங்களுக்காக, “ பொது சர்வ தேச அமைப்பு” என்ற பதம் பின் வருவனவற்றை அர்த்தப் படுத்துவதாகும்--

(i) சர்வதேச அமைப்புகள் சட்ட விலக்களிப்புச் சட்டத்தின் (22 U.S.C. § 288) பிரிவு 1 க்கு ஏற்ப செயலாக்க ஆணை மூலம் நியமிக்கப் பட்டுள்ள ஒரு நிறுவனம்; அல்லது

(ii) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, ஜனாதிபதியால் செயலாக்க ஆணை மூலம் நியமிக்கப் பட்டுள்ள, ஃபெடரல் பதிவேட்டில் உள்ள அத்தகைய ஆணையின் பதிப்பு தேதிக்கு ஏற்ப அமலுக்கு வந்த வேறு எந்த ஒரு சர்வதேச அமைப்பு.

(3) (A) ஒரு நடத்தை, சூழ்நிலை, அல்லது விளைவை பொறுத்தவரையில் அதனை “ அறிந்திருக்கிற” ஒரு நபரின் மன நிலை, அதாவது பின் வரும் பட்சத்தில்--

(i) அத்தகைய நபர் அத்தகைய நடத்தையில் தான் ஈடு படுவது பற்றி, அத்தகைய சூழ் நிலை உள்ளது என்பது பற்றி, அல்லது அத்தகைய விளைவு கணிசமான அளவு நிச்சயமாக நிகழ உள்ளது என்பது பற்றி தெரிந்துள்ளார்; அல்லது

(ii) அத்தகைய சூழ் நிலை உள்ளது அல்லது அத்தகைய விளைவு கணிசமான அளவு நிச்சயமாக நிகழ உள்ளது என உறுதியான நம்பிக்கையை அத்தகைய நபர் கொண்டுள்ளார்.

(B) ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையின் இருப்பு பற்றிய அறிவு ஒரு குற்றத்திற்கு தேவைப் படுகிற போது, அத்தகைய சூழ்நிலை இல்லை என ஒரு நபர் உண்மையிலே் நம்பினால் ஒழிய, அத்தகைய சூழ் நிலையின் இருப்புக்கான நிகழ்தகவு உயரளவில் உள்ளது பற்றி அந்த நபர் தெரிந்திருக்கிற பட்சத்தில் அத்தகைய அறிவு நிறுவப் படுகிறது.

(4) (A) " வழமையான அரசு நடவடிக்கை" என்ற பதம் பின் வருவனவற்றில் ஒரு வெளிநாட்டு அதிகாரியால் சாதாரணமாகவும் பொதுவாகவும் மேற் கொள்ளப் படுகிற ஒரு நடவடிக்கையை மட்டும் அர்த்தப் படுத்துவதாகும்--

(i) ஒரு வெளிநாட்டில் வணிகம் செய்வதற்கு ஒரு நபர் தகுதி பெறுவதற்குரிய அனுமதிகள், உரிமங்கள், அல்லது இதர அதிகாரப் பூர்வ ஆவணங்களைப் பெறுவதில்;

(ii) விசா மற்றும் பணி ஆணைகள் போன்ற அரசு பத்திரங்களை செயலாக்குவதில்;

(iii) காவல் துறை பாதுகாப்பு, அஞ்சல்களை எடுத்துச் செல்லுதல் மற்றும் விநியோகித்தல், அல்லது ஒப்பந்த செயல் பாடு தொடர்புடைய ஆய்வுகளை அல்லது நாடு முழுவதும் இருந்து சரக்குகளை எடுத்துச் செல்லுதல் தொடர்புடைய ஆய்வுகளை திட்டமிடல்;

(iv) தொலைபேசி சேவை, மின்னாற்றல் மற்றும் தண்ணீர் வழங்கல், சரக்குகளை ஏற்றி இறக்குதல், அல்லது அழிகேடு அடைவில் இருந்து விரைவில் அழியக்கூடிய பொருட்கள் அல்லது சரக்குகளை பாதுகாத்தல்; அல்லது

(v) அது போன்ற இயல்பிலான நடவடிக்கைகள்.

(B) " வழமையான அரசு நடவடிக்கை" என்ற பதம், ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு புதிய வணிகத்தை வழங்குவதற்கு அல்லது அதனுடனான வணிகத்தை தொடர்வதற்கு ஒரு வெளிநாட்டு அதிகாரியால் எடுக்கப் படுகிற எந்த ஒரு முடிவையும், அல்லது ஒரு குறிப் பிட்ட கட்சிக்கு புதிய வணிகத்தை வழங்குவதற்கு அல்லது அதனுடனான வணிகத்தை தொடர்வதற்குரிய ஒரு முடிவை ஊக்குவிக்கும் முடிவு எடுத்தல் செயலாக்கத்தில் தொடர்புடைய ஒரு வெளிநாட்டு அதிகாரியால் எடுக்கப் படுகிற எந்த ஒரு நடவடிக்கையையும் அவர் மேற் கொண்டாலும் மேற் கொள்ளாவிட்டாலும் அல்லது என்ன நிபந்தனைகளின் மீது இருந்தாலும் இல்லா விட்டாலும் இவற்றை உள்ளடக்கியது அல்ல.

(5) "மாநிலங்களுக்கு இடையிலான வணிகம்" என்ற பதம், பல் வேறு மாநிலங்களுக்கு இடையேயான அல்லது எந்த ஒரு வெளிநாடு மற்றும் மாநிலத்திற்கு இடையேயான அல்லது எந்த ஒரு மாநிலத்திற்கும் மற்றும் எந்த ஒரு வெளியே உள்ள இடம் அல்லது கப்பல் அவற்றைப் போன்றவற்றுக்கும் இடையேயான வர்த்தகம், வணிகம், போக்குவரத்து, அல்லது தகவல் தொடர்பு உள்ளிட்டவற்றை அர்த்தப் படுத்துவதாகும் மற்றும் அத்தகைய பதம் பின் வருவனவற்றையும் உள்ளடக்கியதாகும்.—

(A) மாநிலங்களுக்கு இடையிலான ஒரு தொலைபேசி அல்லது இதர தகவல் தொடர்பு வழி முறைகள், அல்லது

(B) வேறு எந்த ஒரு மாநிலங்களுக்கு இடையிலான வழி வகை.

**§ 78 f f. அபராதங்கள்**

**(a) வேண்டுமென்றே செய்யப் படுகிற மீறல்கள்; பொய்யான மற்றும் தவறாக வழி நடத்தும் கூற்றுகள்**

இந்த அத்தியாயத்தின் எந்த ஒரு விதியையாவது (இந்தத் தலைப் பின் பிரிவு 78 d d - 1 ஐ தவிர வேறு) அல்லது அதன் கீழ் மீறுதல் என்பது சட்ட விரோதமாக உள்ள அல்லது இந்த அத்தியாயத்தின் விதி முறைகளின் கீழ் கடைப் பிடித்தல் தேவைப் படுகிற எந்த ஒரு விதி அல்லது ஒழுங்கு முறையை மீறுகிற எந்த ஒரு நபரின் மீதும், அல்லது இந்த அத்தியாயத்தின் கீழ் தாக்கல் செய்யப் பட வேண்டியிருக்கிற எந்த ஒரு விண்ணப்பம், அறிக்கை, அல்லது

ஆவணத்தில் அல்லது அதன் கீழ் உள்ள எந்த ஒரு விதி அல்லது ஒழுங்குமுறையில் அல்லது இந்த தலைப்பின் பிரிவு 78o ன் உட்பிரிவு (d) ல் வழங்கப் பட்டுள்ளதற்கு ஏற்ப ஒரு பதிவு கூற்றில் அடங்கியுள்ள உடன்படுதல்களில், அல்லது எந்த ஒரு சுய ஒழுங்குமுறை அமைப்பின் மூலம் ஒரு உறுப்பினர் தகுதிக்கான விண்ணப்பத்துடன் அல்லது அவற்றினூடே பற்கேற்பில் தொடர்புடைய அல்லது அவற்றைப் போன்ற ஒரு உறுப்பினருடன் தொடர்புடையதாவதற்கு, வேண்டுமென்றே மற்றும் அறிந்திருந்தே எந்த ஒரு அறிக்கையையும் உருவாக்குகிற, அல்லது உருவாக்குவதற்கான காரணங்களை ஏற்படுத்துகிற எந்த ஒரு நபரின் மீதும், அந்தக் கூற்று எந்தவொரு பொருள் உண்மையைப் பொறுத்தவரை பொய்யாக அல்லது தவறாக வழி நடத்துவதாக இருப்பதாக குற்றத் தீர்ப்பு அளிக்கப் பட்டால் $5,000,000 மிகாத அபராதம் அல்லது 20 ஆண்டுகளுக்கு மிகாமல் சிறைத் தண்டனை, அல்லது இந்த இரண்டும் விதிக்கப் படும், இதில் விதி விலக்காக, அத்தகைய நபர் ஒரு இயற்கையான நபராக இல்லாமல் வேறு ஒரு நபராக இருக்கிற போது, $25,000,000 மிகாத ஒரு அபராதம் விதிக்கப் படலாம்; ஆனால் இந்தப் பிரிவின் கீழ் எந்த ஒரு விதி அல்லது ஒழுங்கு முறையின் மீறலுக்காக எந்த ஒரு நபரும் அத்தகைய விதி அல்லது ஒழுங்கு முறை இருக்கிறது என்பது பற்றி தான் எந்த ஒரு அறிவும் கொண்டிருக்கவில்லை என அவர் நிரூபிக்கிற பட்சத்தில் சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப் பட மாட்டார்கள்.

**(b) தகவல்கள், ஆவணங்கள், அல்லது அறிக்கைகளை தாக்கல் செய்ய தவறுதல்**

இந்த தலைப்பின் பிரிவு 78o ன் உட்பிரிவு (d) ன் கீழ் அல்லது அதன் கீழ் உள்ள எந்த ஒரு விதி அல்லது ஒழுங்கு முறையில் தாக்கல் செய்யப் பட வேண்டியிருக்கிற தகவல்கள், ஆவணங்கள், அல்லது அறிக்கைகளை தாக்கல் செய்யத் தவறுகிற எந்த ஒரு பிணைத்தை வழங்கியவரும் அத்தகைய தாக்கல் செய்ய தவறுதல் தொடர்கிற ஒவ்வொரு நாளுக்காகவும் $100 தொகையை அமெரிக்காவுக்கு தண்டமாக இழக்க வேண்டும். இந்தப் பிரிவின் உட்பிரிவு (a) ன் கீழ் அத்தகைய தாக்கல் செய்ய தவறுதலுக்காக எழும் என கருதப் படக் கூடிய எந்த ஒரு குற்றவியல் அபராதத்தின் மாற்றான அத்தகைய தண்ட இழப்பு, அமெரிக்காவின் கருவூலத்திற்கு செலுத்தப் பட வேண்டும் மற்றும் அமெரிக்காவின் பெயரில் ஒரு உரிமையியல் வழக்கில் அதனை திரும்பப் பெற முடியும்.

**(c) பிணையத்தை வழங்கியவர்கள், அதிகாரிகள், நெறியாளுநர்கள், பங்குதாரர்கள், ஊழியர்கள், அல்லது பிணையத்தை வழங்கியவர்களின் முகவர்களால் மேற் கொள்ளப் படும் மீறல்கள்**

(1) (A) இந்தத் தலைப்பின் [15 U.S.C. § 78 d d -1] 30 A பிரிவின் உட்பிரிவு (a) அல்லது (g) யை மீறுகிற எந்த ஒரு பிணைத்தை வழங்கியவரின் மீதும் $2,000,000 மிகாத அபராதம் விதிக்கப் படும்.

(B) ஆணைக் குழுவால் கொண்டு வரப் படுகிற ஒரு நடவடிக்கையில் இந்தத் தலைப்பின் [15 U.S.C. § 78 d d -1] 30 A பிரி வின் உட்பிரிவு (a) அல்லது (g) யை மீறுகிற எந்த ஒரு பிணைத்தை வழங்கியவரின் மீதும் $10,0 00 மிகாத உரிமையியல் அபராதம் விதிக்கப் படுவதற்கு உட்பட்டு இருக்கும்.

(2) (A) அத்தகைய ஒரு பிணையத்தை வழங்கியவரின் சார்பாக செயல் படுகிற, இந்தத் தலைப்பின் [15 U.S.C. § 78 d d -1] 30 A பிரிவின் உட்பிரிவு (a) அல்லது (g) யை மீறுகிற அதிகாரி, நெறியாளுநர், ஊழியர், முகவர் அல்லது பங்குதாரர் எவரின் மீதும் $100,000 மிகாத அபராதம் அல்லது 5 ஆண்டுகள் மிகாத சிறைத் தண்டனை, அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

(B) ஆணைக் குழுவால் கொண்டு வரப் படுகிற ஒரு நடவடிக்கையில், அத்தகைய ஒரு பிணையத்தை வழங்கியவரின் சார்பாக செயல் படுகிற, இந்தத் தலைப்பின் [15 U.S.C. § 78 d d -1 ] 30 A பிரிவின் உட்பிரிவு (a) அல்லது (g) யை மீறுகிற அதிகாரி, நெறியாளுநர், ஊழியர், முகவர் அல்லது பங்குதாரர் எவரின் மீதும், $10,000 மிகாத உரிமையியல் அபராதம் விதிக்கப் படுவதற்கு உட்பட்டு இருக்கும்.

(3) பத்தி (2) ன் கீழ் ஒரு பிணையத்தை வழங்கியவரின் எந்த ஒரு அதிகாரி, நெறியாளுநர், ஊழியர், அல்லது முகவர் அல்லது பங்குதாரர் மீது ஒரு அபராதம் விதிக்கப் ப டுகிற போதெல்லாம், அத்தகைய பிணையத்தை வழங்கியரால், நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ, அத்தகைய அபராதம், செலுத்தப் பட க் கூடாது.